சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

91. வீணையும், ஆத்தி மாலையும்

'சங்கீத அறிஞனாக இருக்கவேண்டும்; அல்லது ரஸிகனாகவாவது இசைகேட்டு உருகும் தன்மையனாக இருக்க வேண்டும். இந்த இரு நிலையில் ஒன்றும் வாய்க்கப் பெறாதவன், ராஜத்துரோகம் முதலான பாவங்களைச் செய்யக் கூடியவனாவன்' என்றார் ஷேக்ஸ்பியர் மகாகவி.

வீணையும் கொலைக் கருவியா?

ராவணனே இசையறிஞனாகவும் இசை—ரஸிகனாகவும் இருந்தும் கொடிய பாவங்களைக் கூசாது செய்கிறான் என்பதும், 'ராஜா, சக்கரவர்த்தி' என்ற பெயரால் மானுடத்திற்கும், தெய்வத் தன்மைக்கும் ஒருங்கே துரோகம் செய்து வருகிறானென்பதும் ராமாயணம் அறிவிக்கும் செய்தி. ராவணன் கொடி வீணைக் கொடி என்பதை அனைவரும் அறிந்திருப்பர். போருக்குப் புறப்படும் போதும் தேரில் வீணைக்கொடி பறந்து கொண்டிருக்குமாம். எனவே இது, இவனது, கொடுமையோடு ரஸிகத் தன்மைக்கும் சான்றாகிறது.

ராவணன் கொடுமையையும் ரஸித்துச் செய்பவன். இசைக் கலைஞன் வசைக் கலைஞனும்தான்! ரோமாபுரி எரியும் போது அந்தத் தீயழகைப் 'பிடில்' வாசித்து ரஸித்த சக்ரவர்த்தியைக் குறித்துக் கேள்வியுற்றிருக்கிறோமல்லவா!

முதற்போரில் ராமனுடைய சேனைகளை அழித்து ராமனையும் தோற்கடித்துவிட வேண்டும் என்று ராவணன் தேரில் புறப்பட்டு வரும்போதும், வீணைக்கொடி காற்றிலே படபடவென்று நீட்டி அடித்த வண்ணம் பறந்து கொண்டிருக்கிறது. சங்கீதப் பேரறிஞனுக்கும் மகா ரஸிகனுக்கும் உரிய பெருமையுடன் தான் அந்த வீணை வடிவத்தை அந்தக் கொடியில் அப்படிப் பொறித்திருக்கிறான் ராவணன்.

ஆனந்தத்தை விளைக்கும் அந்த ஏழிசைக் கருவியின் வடிவமும் இப்போது அச்சத்தை விளைக்கின்றது. ஆம்; இந்த யுத்த யாத்திரை எத்தனை உயிர்களைப் பலி கொள்ளப் போகிறது!

வீணை வீணையாகவா காண்கிறது இப்போது! யமன் யுகாந்த காலத்திலே நாக்கை நீட்டிக் கொண்டு இரை தேடப் புறப்பட்டது போலல்லவா தோன்றுகிறது!

இந்த வீணைக்கொடி வருணனையில் கவிஞன் தனது ராவண சித்திரத்தின் ஓர் அதிசய உண்மையை வெளியிடுகிறான்;

'ஏழிசைக் கருவிவீற்
றிருந்த தென்னினும்,
சூழிருந் திசைகளைத்
தொடரும் தொல்கொடி,
வாழிய உலகெலாம்
வளைத்து வாயிடும்
ஊழியின் அந்தகன்
நாவின் ஓங்கவே!

[ஏழிசைக் கருவி — ஏழு இசைகளுடைய வீணை. வீற்றிருந்தது என்னினும் — சிறப்பாகப் பொறிக்கப் பெற்றிருந்தது என்றாலும். சூழ் இருந்திசைகளை — சூழ்ந்துள்ள பெருந் திசைகளை. தொடரும் — காற்றி

னுல் தொடர்கின்ற. தொல் கொடி — பழமையான கொடி. வாழிய — வாழ்வு பெற்றிருக்கும். ஊழியின் — ஊழிக்கால இறுதியில் தோன்றுகிற. அந்தகன் — யம னுடைய.]

ராமனுக்குக் கொலைக் கருவியாகிய கோதண்டமும் ஆபரணம்தான்; ஒரு கலைக் கருவிதான்! ராவணன் சேர்த்தியோ இசைக் கருவிக்கும் கொலைக் கருவியின் கொடிய தோற்றத்தைத் தருகிறது.

தியவர் மகிழ்ச்சியும் தீமைதான் என் பர். ராவணனுக்கோ இசையும்,—பக்தியும் கூடத் — தீச்செயல்களுக்கு உத்ஸாகம் மூட்டுவதே.

இனி, நாம் கொடியைச் சற்று மறந்து கொடியோனை நோக்குவோம். கருங்கடல் அலைபடும்போது அந்த அலைகளின் நுரை எப்படி வெள்ளையாக இருக்கிறது! அத்த கைய காட்சி, ராவணனுக்கு வெண்சா மரை வீசும்போது ஏற்பட்டு அந்த (இதய)க் கருமைக்கும் ஏதோ ஒரு வசிகர மான கலைப் பொலிவு தருவதுபோலக் காண்கிறது.

முத்துக் குடை பிடிக்கிறார்கள். முழு வெண்ணிலாவுக்குக் கீழே ஒரு ராட்சஸக் கருமேகம் பொருந்தி யிருப்பது போன்ற ஒரு பொலிவு.

இப்படி ஒரு படம் பிடித்துக் காட்டும் பாட்டு:

> பேருங் கற்றைக்
> கவரிப் பெருங்கடல்
> நீரும் நீர்நுரை
> யும்மென நின்றவன்,
> ஊரும் வெண்மை
> உவாமதிக் கீழ்உயர்
> காரும் ஒத்தனன்
> முத்தின் கவிகையான்.

[பேரும் — (இங்கே) வீசுகிற. கற்றைக் கவரி — தொகுதியான சாமரையால். ஊரும் — பொருந்தும். உவாமதி — பூர்ண சந்திரன். காரும் — மேகமும். முத்தின் கவிகையான்—முத்துக் குடையை உடைய வனும்.]

கருங்கடலுக்கிடையே ஒரு பெருங்கடல் போல அந்த அரக்கர் கடலுக் கிடையே தேரும் குதிரையும் படைவீரரும் நெருங் கத் தோன்றுகிறான் அரக்கர்கோன்.

யுக முடிவில் ஏழு கடலும் பொங்கி யெழுந்து அலைக் கைகளைக் கோத்து நிற்கு மாம் மகாமேரு மலையைச் சுற்றி. அப்படி விளங்குகிறான் ராவணன்:

> தேரும் மாவும்
> படைஞரும் தெற்றிட,
> மூரி வன்னெடுந்
> தானையில் முற்றினன்,
> நீரோர் ஏழும்
> முடிவில் நெருக்குநாள்
> மேரு மால்வரை
> யென்ன விளங்கினன்.

[மா — குதிரை. தெற்றிட — நெருங்க. மூரி வல் நெடுந்தானையில் — மிக வலிய பெரிய சேனையில். முற்றினன் — நிரம்பித் தோன்றிய ராவணன். நீர் ஓர் ஏழு — ஏழு கடல்களும். மேரு மால் வரை — மகா மேரு மலை.]

ராட்சஸப் பெருங் கடலின் இடையே இந்தப் புருஷ மேரு வந்து நிற்கும்போது தான் அந்தச் சேனையே நிரம்பித் தோன் றுகிறதாம் அதற்குரிய பூரண நிலையில்.

வீர நெப்போலியன் ஒருவனே போர் முனையில் அந்தப் படைப் பலத்தோடு நாற்பதாயிரம் ஆள்வலிமை அளித்து நின் றது போலக் காணப்பட்டான் என்று ஒரு சரித்திர ஆசிரியன் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

பேய்கள் ஆயுதங்களைச் சுமந்து கொண்டு வருகின்றன. பேய்களை நோக் கும் போது அந்தக் கொலைக் கருவிகள் தாம் எவ்வளவு அழகுடையனவாகவும் தூய்மையுள்ளனவாகவும் தோற்றம் அளிக்கின்றன!

என்ன ஆயத்தம்! என்ன ஆயுதப் பெருக்கம்! எப்பேர்ப்பட்ட ஆயுதம் தாங்கிகள்!

இன்னும், என்ன முன்னேற்பாடு! போரில் தேர் அழிந்து விட்டால் என் செய்வது! உடனே ஏறிக் கொள்ளத் தக்க சேமத் தேர்கள் எத்தனை உடன் வந்திருக்கின்றன!

ராவணன் வருகைதான் அரக்கர்க ளுக்கு எவ்வளவு மகிழ்ச்சியை ஊட்டி விட்டது!—விஞ்ஞானம் இசைப்பிரியர் களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதுபோல!

வானரப் பெரும்படையிலோ, எத்த கைய சோர்வைப் புகுத்தி விட்டது! உல கெலாம் கடந்து வெற்றி முற்றியவனது வினைக் கொடி எத்தனையோ கொலைக் கருவிகளைப் போல் என்ன பயம் உண் டாக்குகிறது!

ராவணனுடைய ஜயகாந்த சக்தியால் இரு பெரும்படைகளும் எப்படிப் பாதிக் கப்படுகின்றன என்பதை இதோ பார்த் துக் கொள்ளுங்கள்:

ஊன்றிய பெரும்படை
உலைய, உற்றுடன்

ஆன்றபோர் அரக்கர்கள்
நெருங்கி ஆர்த்தெழத்

தோன்றினன், உலகெலாம்
தொடர்ந்து நின்றன

மூன்றையும் கடந்தொரு
வெற்றி முற்றினன்.

[ஊன்றின — அரக்கர்களை எதிர்க்க வேண்டுமென்று ஊன்றி நின்ற. உற்று உடன் ஆன்ற போர் அரக்கர்கள்— தன்னுடன் பொருந்தி அமைந்த, போரில் வல்ல, அரக்கர்கள். ஆர்த்து எழ — ஆரவாரித்துப் பொங்க. தொடர்ந்து — (உலகங்களிலெல்லாம் ஒன்றன்மீது ஒன்று) தொடர்ச்சியாகி. நின்றன மூன்றையும்—சொர்க்கம். மத்திமம். பாதாளம் என மூன்று வகையான. உலகெலாம் கடந்து — உலகங்களையெல்லாம் கடந்து போய். ஒரு வெற்றி— ஒப்பற்ற வெற்றியை. முற்றினன் — நிரம்பச் செய்து கொண்டவனை ராவணன்.]

ராவணன் போர்க்களத்திற்கு வந்திருக்கும் செய்தியை ராமனுக்கு வானரத் தூதர்கள் அறிவிக்கிறார்கள். 'ஒரு பெரிய கருங்கடலை யொத்த சேனையுடனும் சீற்றத்துடனும் போர்ப் பெருங்களம் புகுந்துளான் சிறு தொழில் அரக்கன்' என்று செய்தி சொல்லுகிறார்களாம். கொலைப் பெருந் தொழில் உண்மையில் சிறு தொழில் தானே!

ராவணனைக் கண்ட தங்கள் படையினர் போல் இந்தத் தூதுவர்களும் மனம் உலைந்தார்கள் என்பதில் ஐயமில்லை. எனினும் ராமனைக் கண்டதுமே அந்தச் சோர்வு பறந்து போகிறது; ராவணகாரமான காரியங்களையும் எடை போட்டுப் பார்க்கும் துணிவு வந்து விடுகிறது.

கருங்கடலை ஒத்த தோற்றமும், அந்தக் கடல் கொந்தளிப்பது போன்ற சீற்றமும் அந்தக் கடற்பெருஞ் சேனையும், இப்போது இவர்களைப் பிரமிக்கச் செய்யவில்லை:

ஓதுறு கருங்கடற்(கு)
ஒத்த தானையான்,

தீதுறு சிறுதொழில்
அரக்கன், சீற்றத்தால்



போதுறு பெருங்களம்
புகுந்து ளான்எனத்
தூதுவர் நாயகற்(கு)
அறியச் சொல்லினர்.

[ஓதுறு—பிரசித்தமாகச் சொல்லப் படுகிற. தானையான்—சேனை உடையவனுகி. தீதுறு—தீமை பொருந்திய. போதுறு—புகுதற்கு உரிய. நாயகற்கு—நாயகனுகிய ராமனுக்கு.]

ராமனைக் கண்ட மகிழ்ச்சி தூதர்களுக்கு; தூதுவர் செய்தி கேட்ட மகிழ்ச்சி ராமனுக்கு:

ஆங்(கு)அவன் அமர்த் தொழிற்(கு)
அனுகி ஞன்என,
'வாங்கினன் சீதையை!'
என்னும் வன்மையால்,
தாங்குறு பிரிவினல்
தேய்ந்த தேய்வற
ஓங்கின இராகவன்
மிளிந் தோள்களே

[அமர்—போர். வாங்கினன் சீதையை—நான் சீதையை மீட்டுக் கொண்டேன். வன்மையால்—உறுதியான எண்ணத்தால். தேய்வு அற—மெலிவு தீர. மிளித் தோள்கள்—வலிய தோள்கள்.]

ராமனும் போருக்குச் சந்நத்தனுகிருன். கம்பன் அந்தப் போர்க் கோலத்தைத் தன் கலா யோகத்தால் காண முயல்கிருன். தனி இன்பமும் தனிமை யின்பமும் காணவல்ல அகக் கண்ணை மலரத் திறந்து பார்க்கிருன்.

அரையில் மரவுரி ஆடைதான். அதன் மேற் புறத்திலே பொருந்திப் பொலிவதும் உறுதியுள்ள வாளாயுதம் தான். 'ஆறும் பரம் பொருளல்லவா இப்படி யாதும் இல்லாத ஏழையின் உடை தரித்துக் கொலைக் கருவி பொலியக் காண்கிறது!' என்று பரவசமாகிறது கவியுள்ளம்.

தான் கண்ட அந்தக் காட்சியைக் கவிஞன் நம்மோடு பகிர்ந்து அனுபவிக்கவும் ஆசைப்படுகிருன்:

தொடையுறு வற்கலை
ஆடை சுற்றி,மேற்
புடையுறு வயிரவாள்
பொலிய வீக்கினன்,
இடையுறு கருமத்தின்
எல்லை கண்டவர்
கடையுறு நோக்கினில்
காணும் காட்சியான்

[தொடையுறு—தொடுத்தாற் போலிருக்கும். வற்கலை—மரவுரி. மேற் புடை—மேற்புறத்திலே. உறு—பொருந்திய. வயிர வாள்—உறுதியுள்ள வாளாயுதம். வீக்கினன்—கட்டிக்கொண்டான். இடையுறு—இடைப்பட்ட காலத்தில். கருமத்தின் எல்லை கண்டவர்—இனிக் கர்ம பலன் தம்மைத் தொடப் பெருத ஞானிகள். கடையுறு நோக்கினில்—எல்லையான ஞானக் கண்ணுல்.]

புருஷோத்தமன் மரவுரி கட்டி வாளையும் கட்டிக் கொண்டதுடன்,

சித்திரச் சேவடிக்
கழலும் சேர்த்தினுன்

[கழல்—வீரக்கழல்.]

என்று அந்த அதிசயக் காட்சியைத் தொடர்ந்து பார்க்கிருன் கவிஞன்.

பூத்தொழில் அமைந்த இருப்புக் கவசத்தை இறுகக் கட்டிக் கொள்வதையும், கைக் கவசம், விரற் கவசம் பூட்டிக் கொள்வதையும் கண்டு காட்டி,

துளவொடு தும்பையும்
சுழியச் சூடினுன்

[சுழிய—வளைய.]

என்று கூறி முடிக்கிருன்.

பழந்தமிழ் வீரர்கள் போருக்குச் செல்லும்போது வழக்கமாய்ச் சூடிக் கொண்ட தும்பை மாலையையும் ராமன் சூடிக் கொண்டதாய்க் கண்டு காட்டும் கவிஞன், சோழ மன்னர்களுக்கு உரிய ஆத்தி மாலையையும் ராமன் சூடிக் கொண்டதைப் பார்த்து விடுகிருன்!

சோழமன்னர்கள் 'சூரிய வம்சத்தினர்' என்று தங்களைச் சொல்லிக் கொண்டனர். சூரிய குலம் ராமனுடைய வம்சமல்லவா! எனவே சூரிய குலப் பெரியோர்களான சிபிச் சக்கரவர்த்தி முதலானவர்களைத் தங்கள் முன்னேராகக் கொண்டதுபோல் ராமபிரானையும் தங்கள் குல முதல்வருள் சிறந்தவனுகக் கருதுவாராயினர்.

எனவே, சிவபக்தர்களான சோழர்களுக்கு ராம பக்தியும் ராமாயண பக்தியும் ஏற்பட்டிருந்தன. வால்மீகியின் 'மதுர இராமாண கதை' சோழமகா ராஜ்யத்திலும் பக்தி வெள்ள மிட்டுப் பொங்கிப் பரவியது.

இந்த நிலையில், பரிபூர்ண ராமாவதாரத்தைத் தமிழகத்திலே பொன்னியாற்றங் கரையில் நிகழச்செய்த கம்பன், ராமபிரானுக்குத் துளசிமாலையுடன் ஆத்தி மாலையையும் தும்பை மாலையையும் சூட்டி அழகு செய்து பார்க்கிருன்.



92. கடன் கொடுத்த காட்சி

நாலு திசைகளி லிருந்தும் பூக்கள் வந்து மழையாகப் பொழிகின்றன. விண்ணும் பூமாரி பொழிகிறது. பகவான் தரிசனம் கொடுக்கும் போது பக்திக்குப் பஞ்சம் ஏது!

பாற்கடலோடு பரமன்

பாற்கடலோடு பரமன் வந்து தோன்றி விட்டால் பக்தி எவ்வளவு அதிசயமாகத் தன்னை வெளியிட்டுக் கொள்ளுமோ, அப்படி விண்ணும் மண்ணும் மலர் தூவி இறைஞ்சுகின்றனவாம், அந்த வெள்ளை வானரர்களின் கடற்படையிடையே ராமன் தோன்றும்போது;

நாற்கடல் உலகமும்,
  விசும்பும் நாள்மலர்

தூர்க்க, வெஞ் சேனையும்
  தானும் தோன்றினன்,

மாற்கடல் வண்ணன்தாய்
  வளரும் மாலிரும்

பாற்கட லோடும்வந்(து)
  எதிரும் பான்மையான்!

[நாற்கடல் உலகமும் – நாலு திசைகளிலும் உள்ள கடல்களால் சூழப்பட்டிருக்கும் மண்ணுலகமும். விசும்பும்–வானுலகமும். நாள் மலர் – அன்று மலர்ந்த மலர்களை. தூர்க்க – மிகுதியாய்த் தூவ. வெஞ்சேனையும் – கொடிய வானர சேனையும். மாற்கடல் வண்ணன் – கரிய கடலின் நிறத்தையுடைய திருமால். தான் வளரும் – தான் கண் வளரும். மாலிரும் பாற்கடலோடும் – மிகப் பெரிய அந்தப் பாற்கடலுடனே. பான்மை – தன்மை.]

வானர சேனையின் பின்னணியின் நெற்றியிலே தம்பி நின்று கொண்டிருந்தான். அங்கே வந்து சேர்ந்து விட்டான் ராமனும்.

அரக்கச் சேனையும் குரங்குச் சேனையும் கைகலந்தன. நமக்கு விருந்தினர்கள் மேலும் மேலும் வந்து கொண்டிருப்பார்களே என்று யமன் அவர்களை வரவேற்கச் சித்தமா யிருக்கிறானும்.

போர்க்களத்தில் ராவணன்

ராவணன் வில்லில் நாணொலி எழுப்புகிறான். வானரங்கள் சிதறி நிலைகெட்டு ஓடுகின்றன. சில வானரங்கள் அந்தச் சத்தம் கேட்டே இறந்து போகின்றனவாம். சில வானரங்கள் அழுகின்றன. வேறு சில இந்தப் போர்க்களத்தில் உயிருடனே புரண்டு போகின்றனவாம்.

இந்த நாணொலியால் வானரர் மட்டுமா, வானவர் மட்டுமா!—அத்தகைய ஒலியை அடிக்கடி கேட்டிருக்கும் அரக்கர்களும் நடுங்கிப் போகிறார்களாம். அப்படித் தட்டி நாணைத் தெறித்து ஒலி எழுப்பி விடுகிறான் ராவணன்.

அப்போது சுக்கிரீவன் ராவணனுடன் போர் செய்ய முற்படுகிறான். கல்லும் மரமும் கொண்டு கடும் போர் புரிந்து சலித்துப் போகிறான்.

உடனே மேற்கு வாசலில் இருந்த அனுமன் வடதிசை வாசலுக்கு ஓடி வந்து சுக்கிரீவன் தொடங்கிய போரைத் தொடர்ந்து நடத்துகிறான். அனுமனது வஜ்ர தேகத்தையும் ராவணனுடைய அம்புகள் புண்படுத்திச் சலிக்கச் செய்கின்றன.

இந்தத் தாக்குதலில் வானரப்படை முறியடிக்கப்பட்டுச் சிதறிப்போகிறது.

அவ்வளவு மும்முரமாக இருக்கிறது இந்த முதல் தாக்குதல்.

இந் நிலையில் லட்சுமணன், அரக்கர்கள் நடுங்க நாணொலி செய்துகொண்டு வருகிறான். ராவணனும் கிரீடம் நிமிரும்படி தன் தலையை அசைத்து வியக்கிறான்–'இப்படி ஒரு மனிதன் இருக்கிறானா!' என்பதாக.

லட்சுமணனுடைய அம்புகளால் அரக்கர்கள் அழிவது கண்டு ராவணனுக்குக் கோபம் மூண்டுவிடுகிறது. உடனே நெருங்கி எதிர்க்கிறான். ராமன் தம்பியோ,

சீற்றமும் தானும்
நின்றான் ; பெயர்ந்திலன்
சிறிதும் பாதம்.

[பெயர்ந்திலன் – பின்வாங்கினானில்லை.]

லட்சுமணன் காத்துக் கொண்டிருந்த போதுதானே ராவணன் பிராட்டியை வஞ்சித்துக் கவர்ந்து சென்றான்! எனவே அவனை நோக்கி லட்சுமணன், 'கள்வா, இன்றைத் தினம் நீ தப்பிப் போக முடியாது' என்று சொல்லிக்கொண்டே அம்புகளைப் பிரயோகிக்கிறான். அந்த அம்புகளை ராவணன் அறுத்து அறுத்துத் தள்ள, மேலும் மேலும் வீராவேசத்துடன் சரமாரி பொழிகிறான் லட்சுமணன்.

கடைசியாக ராவணன் லட்சுமணன் விட்ட அம்புகளையெல்லாம் விலக்கி அவனுடைய அம்புக் கூட்டையும் அறுத்து விடுகிறான். இதற்குள் சோர்வு ஆறிய அனுமன், ராவணனுடைய தேருக்கு எதிராக நடந்து வந்து வீர வாதஞ் செய்த வண்ணம் ஓங்கி வளர்ந்து நிற்கிறான்.

'உன் வாள்வலியையும் தோள்வலியையும், நீ உலகத்தை அழித்த கொடுமையையும் நான் இதோ ஒரு குத்தில் ஒழித்துவிடப் போகிறேன். இப்படி என் எதிர் நிற்கத் துணிந்த அந்த வன்மைக்கும் முடிவு கட்டி விடுகிறேன்' என்கிறான் அனுமன்.

ராவணனை நோக்கி மறுபடியும், 'என் ஒற்றைக் கைக் குத்திற்கு உயிர்ப் பரிசு கொடாமல் நீ தப்பிப் பிழைத்து நின்றால், நீயும் உன் கை வரிசைகளால் என்னைக் குத்திப் பார்' என்கிறான்.

இந்த அனும வீரத்தை ராவணன் வியந்து பாராட்டுகிறான். 'என் எதிரே உன்னைத் தவிர வேறு யாரே இப்படி வந்து நிற்க முடியும்?' என்கிறான்.

அனுமன் கையில் ஆயுதம் ஒன்றும் இல்லை. அப்படியிருந்தும் ராவணனுடைய சுற்றத்தை அழித்திருக்கிறான். வில்லுங் கையுமாகத் தேர்மீது வந்திருக்கும் அரக்கர்கோனுக்கு எதிரே துணிந்து வந்து குத்துச் சண்டைக்கும் அழைக்கிறான். இவனுக்கு இணை எங்கும் இல்லை என்பதை ராவணனே ஒப்புக்கொள்கிறான்.

அனுமனிடத்திலேயே ஒப்புக் கொள்கிறான் :

முத்தேவர்கள் முதலாயினர்,
முழுமூன்(று)உல கிடையே
எத்தேவர்கள் எத்தானவர்
எதிர்வார்இகல் என்நேர்,
பித்தேறினர் அல்லால்? இடை
பேரா(து),எதிர் மார்பில்
குத்தேஎன நின்றாய்இது
கூறும்தரம் அன்றால்.

[முழுமூன்று உலகு இடையே – முழுமையான மூன்று உலகங்களிலும் உள்ள தானவர் – அசுரர்கள். இகல் – போரில். என் நேர் – எனக்கு நேராக. இடை பேராது – நின்ற இடத்திலிருந்து சலியாமல்.]

அனுமன் தனக்கு எதிரே நின்று தன்னைக் குத்துப் போருக்கு அழைத்ததே பழியாகி விட்டதென்று வெள்கித் தலை குனிகிறான் ராவணன். 'அற்பக் குரங்காகிய நீ இப்படிச் சொல்லத் துணிந்து விட்ட பின், நீயே விரைந்து வந்து உலகம் காணக் குத்துவாய்; நான் இசையாமல் என் செய்வது?' என்கிறான்.


இப்படி ராவணன் சொன்ன போதிலும், அந்த வீர உணர்ச்சியையும் மான உணர்ச்சியையும் அனுமன் பாராட்டுகிறான். உடனே அந்தப் பெரிய வயிர மார்பில் பெரிய வயிரக் கை, முழு வலிமையும் உபயோகித்துக் குத்தி விடுகிறது :

மார்பில்கடி(து) எதிர்குத்தினன்
வயிரக்கரம் அதனால்.

[கடிது – விசையாக.]

ராவணன் கண்களிலிருந்து நெருப்புப் பொறி சிந்தப் 'பத்து மூளைகளும் சிந்தி விட்டனவோ!' என்ற உணர்ச்சியும் ஏற்படுகிறதாம். தலைகள் கழுத்தில் நிற்க மாட்டாமல் சாய்கின்றன. கவசத்திலுள்ள இரத்தினங்கள் தெறித்து விழுகின்றன. அரக்கர்கள் பயந்து ஆயுதங்களைக் கீழே போட்டு விடுகின்றனராம்.

அந்தக் குத்தின் விசையால் ராவணன் சலிப்படைந்தான் என்பதில் ஐயமில்லை.



தள்ளாடிய வடமேருவில்
சலித்தான், அறம்வலித்தான்.

[வட மேருவில் – வடமேருவைப்போல. அறம் வலித்தான் – அறத்தை ஹிம்ஸித்த ராவணன்.]

சுக்கிரீவனுடன் நடந்த குத்துச் சண்டையில் கிடைத்த எத்தனையோ குத்துகளுக்கும் அசையாத மேரு இப்போது இப்படித் தள்ளாடித் தவிப்பதைக் காண்கிறோம்.

இப்படிக் குத்திவிட்ட வானரன்மீது வானவர் வியந்து மலர்களையும் வாழ்த்து மொழிகளையும் பொழிகிறார்கள். மற்ற வானரர்கள் ரோமம் சிலிர்க்கக் கூத்தாடுகிறார்கள்.

ஆனால் இந்த மகிழ்ச்சிக் கூத்திற்கு அதிகமாய் அவகாசம் கொடுக்காமலே ராவணன் மூர்ச்சை தெளிந்து பெருமூச்செறிகிறான். உடனே வார்த்தை யொன்றும் வெளிப்படவில்லை. எனவே அனுமனை நோக்கி எரியெழ விழித்த வண்ணம் மறுபடியும் எதிரே நெருங்கி வந்து நிற்கிறான்.

இவ்வளவு கோபத்துடன் எதிர்வந்து நின்றும் ராவணனால் அனுமனது அந்தக் குத்துத் திறனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லையாம்.

வலிஎன்பதும் உளதே,அது
நின்பாலது, மறவோய்!

[வலி – வலிமை. நின்பாலது – உன்னிடத்தில்தான் உள்ளது. மறவோய் – வீர பராக்கிரமசாலியே.]

என்று, தனக்குப் பேசும் சக்தி வந்ததுமே அனுமனை நோக்கி ராவணன் கூறுவதைக் கேளுங்கள். ராவணேசுவரனாகிய நானும் மெலிவு என்பதை உணர்ந்து கொண்டேன் என்கிறான்:

மெலிவென்பதும் உணர்ந்தேன்;
எனை
வென்றாய்,இனி விறலோய்!

[எனை – என்னை. விறலோய் – வலிமையுள்ளவனே.]

இப்படி அனுமனைப் பாராட்டி நின்ற ராவணன் பளிச்சென்று, 'இப்போது நான் சொல்ல வேண்டியது ஒரே ஒரு வார்த்தை: அதாவது, எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேணும், உன் மார்பிலே குத்துவதற்கு. ஒரு கையால்தான் குத்துவேன். அப்போதும் உன் உயிர் இந்த நெஞ்சுக் கூட்டிலே நிலைத்திருக்குமா என்று பார்ப்போம். இந்த உயிர் நிலைத்திருக்கப் பெறுவாயானால், உன் வீரம் என்றும் சிரஞ்சீவியாக நிலைத்து நிற்கும், இந்த உலகத்திலே!' என்று சொல்லுகிறான்.

இந்தப் பேச்சோடு ராவணன் குரலையும் கேட்கப் பெறுகின்றோம் இந்தப் பாட்டிலே:

'ஒன்றுண்டினி உரைநேர்குவ(து);
உன்மார்பின்என் ஒருகை,



குன்றின்மிசை கடைநாள்விழும்
உரும்ஏறெனக் குத்தா

நின்(று), இந்நிலை தருவாயெனின்,
நீ அல்லவர் உளரோ?

இன்றும்உளை, என்றும்உளை;
இலைஓர்பகை' என்றான்.

[உரை நேர்குவது – நான் உரைக்க வேண்டுவது. குன்றின் மிசை – குன்று மீது. கடை நாள் – யுகாந்த காலத்திலே. உரும் ஏறு என – பெரிய இடிபோல; குத்தா நின்று – நான் குத்தா நிற்கவும்; நான் குத்தவும். இந்நிலை தருவாய் எனின்– இப்படியே நீ உயிர் நிலைத்திருக்கப் பெறு வாயானால். நீ அல்லவர் உளரோ – உன்னைத் தவிர்த்து வேறொருவர் வீரராக நிலைத்திருக்கப்போகிறாரா. இன்றும் உளை, என்றும் உளை – இன்றுபோல் என்றும் இருப்பவனாவாய். இலை ஓர் பகை – உனக்குச் சமமாக வேறொருவர் இல்லை.]

இந்த ராவண வீரத்தை அனுமனும் பாராட்டாமலிருக்கமுடியவில்லை. அனுமன் சொல்கிறான்: 'என்னுடைய குத்தினால் நீ உயிர்விடாது எதிரே நின்று பேசிக்கொண்டு இருப்பதே உனக்கு வெற்றி தான். என்னை நீ வென்றவன் என்று கூற நான் ஒப்புக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.'

இப்படி ராவணனைக் கொண்டாடி, 'நீ உன் கடனைப் பெற்றுக் கொள்ளலாம்' என்று தன் மார்பைக் காட்டுகிறான்:

'நன்றாகநின் நிலைநன்றென
நல்கா, எதிர் நடவாக்

குன்றாகிய திரள்தோளவன்
கடன்கொள்கெனக் கொடுத்
தான்.

[நல்கா (இங்கே) – கொண்டாடி. எதிர் நடவா – எதிரே நடந்து. கொள்கென – கொள்க என.]

அனுமன் தானாக வந்து செய்து கொடுத்த ஒப்பந்தத்தில் முதற்பகுதி நடந்தேறி விட்டது. 'பிற்பகுதியை நீ நிறைவேற்றிக் கொள்' என்பது அனுமன் நிலை. 'ஒப்பந்த ஷரத்'தைக் 'கடன்' என்று குறிக்கிறான் கவிஞன்.

ராவணன் தன் வாய்களை மடித்துப் பல்லால் கடித்துக் கண்கள் தோறும் அனற் பொறி சிந்தக் கையை நெறியக் குறுக்கி அனுமனுடைய மார்பிலே குத்தி விடுகிறான்,–குத்தித் தள்ளுகிறான் என்றே சொல்லும்படி, அந்தக் குத்து அவ்வளவு உக்கிரமாக வந்து விழுகிறது; அனுமனுக்கும் அவ்வளவு தளர்ச்சி ஏற்படுகிறது.

ராவணனது குத்தினால் சலித்தது அனுமன்தானா!—

சலித்த நீதியும்;
சலித்தது கருணையும்
தவமும்!

[சலித்த – சலித்தது.]

என்று கம்பன் அந்தச் சலிப்பின் விளைவுகளைக் கூறி முடிக்கிறான்.

'உன் கைவரிசைகளால் நீ என்னைக் குத்தலாம்' என்பது ஒப்பந்தம். ஆனால் ராவணனது ஒரு கை வீச்சிலேயே அறம் கருணை தவம் மூன்றும் ஆடிப்போகின்றன. எப்பேர்ப்பட்ட ராவணக் கை!

வானரப் படை நிலைகுலைய லட்சுமணன் ராவணனை எதிர்த்து வருகிறான்.

* * *

இந்தப் பகுதியில் கவிதையின் அமைப்பும் நடையும், கதைப் போக்கும் கவனிக்கத் தக்கன. ராவண குணசித்திரத்திற்கும் அனும குண வளர்ச்சிக்கும் இசைந்தவாறு குத்துப் போட்டி நடக்கிறது. குத்து மட்டுமா, உரையாடலும் ராவணாகாரமாகவும் அனுமனுக்கு இசைந்த பெரு நிலையிலும் அமைந்து விடுகிறது.



93. போதமும் பொய்யறிவும்

அனுமன் சலித்ததும் வானரப்படை குலைந்ததும் லட்சுமண கோபத்தைக் கிளப்பிவிட்டன. ராவணன் எய்துகொண்டிருந்த அம்புகளையெல்லாம் தன் அம்புகளால் விலக்கிக்கொண்டே வந்த லட்சுமணன், அந்தப் பத்துக் கைகளும் பிடித்திருந்த பத்து விற்களையும் அறுத்துத் தள்ளிவிட்டான்.

இவ்வாறு அரக்கர்களுக்குக் கலக்கமும் வானரர்களுக்குக் களிப்பும் விளைத்த இந்தத் தோள்வலி கண்டு ராவணனும் மகிழ்ச்சியடைந்து, இந்தத் தோள்களையே பார்த்துக் கொண்டிருக்கிறானாம். போர்வலியை வியக்கிறான். உடல் வலிமையோடு கூடிய வீரத்தை வியக்கிறான். கைவிசையை வியக்கிறான்.

'இந்த வில்லின் கல்வி நன்றாயிருக்கிறது' என்று எண்ணுகிறான். அதிசயம் தோன்றக் கை மடக்கி ராவணன் லட்சுமணனை நோக்கி வாய்விட்டுச் சொல்வதெல்லாம் 'ஒருவன் நீ!' என்ற வார்த்தைதான்:

'நன்று போர்வலி;
நன்றுபோர் ஆள்வலி;
வீரம்
நன்று; நோக்கமும்
நன்று;கைக் கடுமையும்
நன்று;
நன்று கல்வியும்;
நன்றுநின் திண்மையும்
நலனும்!'
என்று கைம்மறித்(து)
இராவணன், 'ஒருவன் நீ!'
என்றான்.

[நலனும்–நீ போர் செய்யும் அழகும். கைமறித்து–கையை மடக்கிக்கொண்டு. ஒருவன் நீ–நீ ஒரு ஆள்தான்.]

சீனப் பெண் ஒருத்தி; தன் இனத்தைப் பார்த்து, நாட்டைப்பார்த்து வெகு காலமாகிவிட்டது. வெள்ளைக்காரர்களையும், இந்தியர்களையுமே பார்த்துப் பார்த்து அலுத்துப் போய் விட்டது அந்தச் சீன இருதயம். ஒரு நாள் இவள் சற்று மஞ்சள் நிறமுள்ள ஒருவரை, (சீனரையல்ல, இந்தியரைத்தான்) கண்டுவிட்டாள். கண்டதும் ஒரே குதூகலமாகிவிட்டது; 'இதோ ஒரு ஆள்—ஒரு மனிதர்!' என்றாளாம்.

ராவணன் தனக்குச் சமான வீரர்களைச் சந்தித்து எவ்வளவோ காலமாகிவிட்டது. பயந்து குனிந்து கைகூப்புவோரைக் கண்டு கண்டு கண்கள் அலுத்தவன், இப்போது லட்சுமணன் அம்பு போடும் லாகவத்தையும் அழகையும் பார்த்ததும், அதன் பயனைக் கண்டதும், 'இதோ ஒரு ஆள்—வில்லாளன்!' என்று குதூகலம் அடைகிறானாம்.

இப்படி லட்சுமணனை நோக்கிச் சொல்லிவிட்டுப் பின்னும் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறான். இந்த வில்லாளனுக்கு ஒப்பாக யாரைக் குறிப்பிடுவது? மூன்று பேரைக் குறிப்பிடலாம் என்று தோன்றுகிறது.

காட்டிலே அன்று கரன் முதலான காளை வீரர்களையெல்லாம் அநாயாசமாக அழித்துவிட்ட அந்தக் கரியவனை (ராமனை) அந்தச் சந்தர்ப்பத்தை ஒட்டி இப்போது நினைத்துப் பார்க்கிறான். அதற்கும் மேலாக, தேவலோகத்திலே போய் இந்திரனை வென்று வலியழித்த தன் மைந்தனின் நினைவு வருகிறது.

லட்சுமணனது வில்லின் கல்வி கண்டதும், மேலே சொன்னபடி ராமனையும் இந்திரஜித்தையும் ஒப்பிடலாமென்று கருதிய ராவணன், அந்த இருவரோடு தன்னையும் சேர்த்துக்கொண்டு, இந்த

மூவருமே லட்சுமணனுக்கு ஒப்பாவர் என்கிறான்.

இப்படி ராவணன் லட்சுமணனுக்கு எதிரே உரக்கச் சிந்திப்பதைக் கேளுங்கள் :

'கானின் அன்(று)இகல்-
கரன்படை படுத்தஅக்
கரியோன்

தானும், இந்திரன்
தன்னைஓர் தனுவலம்
தன்னால்

வானில் வென்றஎன்
மதலையும், வரிசிலை
பிடித்த

யானும் அல்லவர்
யார்உனக்(கு) எதிர்?' என்றும்
இசைத்தான்.

[கானின் – காட்டில். இகல் கரன் – வலிமை பெற்ற கரனுடைய. படுத்த – அழித்த. கரியோன் – கருநிறமுள்ள ராமன். தனு வலம் – வில்வன்மை. மதலையும் – புதல்வனான இந்திரஜித்தும். வரிசிலை – கட்டமைந்த வில். இசைத்தான் – சொன்னான்.]

அனுமன் குத்திலே உடல் சலித்தது. ராவணன் உள்ளமும் சலிக்கத் தொடங்கி விட்டதா !

இப்படி லட்சுமணனை ராவணன் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாது மனப்பூர்வமாகவே பாராட்டிய போதிலும், 'இப்பேர்ப்பட்டவனை இனி வைத்துப் பார்க்கலாகாது; ஒழித்தே தீரவேண்டும்' என்று சங்கற்பம் செய்துகொள்கிறான். இந்த வில்லாளனை வில்லினால் வெல்ல முடியாதென்று கருதிப் பிரமன் கொடுத்த வேலாயுதத்தை எடுத்துக்கொள்கிறான்.



இந்த வேல் தவருமல் லட்சுமணனை ஒழித்துவிடும் என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டு லட்சுமணன்மீது எறிகின்ருன்.

வில்லி ஞல்இவன்
வெலப்படான் எனச்சினம்
விங்க,
'கொல்லு நாளும்இன்(று)
இது'எனச் சிந்தையிற்
கொண்டான்,
பல்லி ஞல்இதழ்
அதுக்கினன், பருவலிக்
கரத்தால்
எல்லின் நான்முகன்
கொடுத்ததோர் வேல்எடுத்
எறிந்தான். [(து)

[இதழ் அதுக்கினன்–உதட்டைக் கடித்து. பருவலிக் கரத்தால்–பருத்த வலிமையுள்ள கையினுல். எல்லின் வேல்–ஒளி வீசிய வேலாயுதம்.]

ராவணன் எறிந்த வேலாயுதம் லட்சுமணன் மார்பில் பாய, அவன் மூர்ச்சித்துப் போகிருன் :

எறிந்த காலவேல்,
எய்த(அம்பு) யாவையும்
எரித்துப்
பொறிந்து போய்உகத்
தீஉக விசையினிற்
பொங்கிச்
செறிந்த தாரவன்
மார்பிடைச் சென்றது,
சிந்தை
அறிந்த மைந்தனும்
அமர்நெடுங் களத்திடை
அயர்ந்தான்.

[கால வேல்–காலனை ஒத்த வேலாயுதம். பொறிந்து போய் உக–அந்த அம்புகள் பொரிந்து போய் ஒழிய. தீ உக–தீச் சிந்த. விசையினிற் பொங்கி–விசையுடன் பொங்கிப் போய். செறிந்த–நெருங்கிய. தாரவன்–மாலை அணிந்த லட்சுமணன். மார்பிடைச் சென்றது–மார்பிலே பாய்ந்தது. சிந்தை அறிந்த மைந்தனும்–அந்த நிலையைச் சிந்தையால் அறிந்துகொண்ட இளையவனுகிய லட்சுமணனும். அமர்நெடுங் களத்திடை–அந்த நீண்ட போர்க்களத்திலே. அயர்ந்தான்–மூர்ச்சித்துப் போனுன்.]

லட்சுமணன் மூர்ச்சித்துப் போனுன் என்றதும், வானரப் படை நிலைகெட்டு ஓடத் தொடங்குகிறது. வான வீதியில் நின்று போரைப் பார்த்துக் கொண்டிருந்த வானரர்களும் மனம் உலைந்து போகிருர்கள். முனிவர்கள் பதைக்கிருர்கள், அரக்கர் படையோ கடலினும் இருமடங்கு முழங்குகிறது.

பூமி சுழல்கிறது சக்கரம்போல—என்ற உணர்ச்சியும் ஏற்படுகிறதாம். சூரிய மண்டலமும் ஒளி மாறித் தோன்றுகிறதாம்.

ராவணன் லட்சுமணனுடைய நிலையை ஊன்றிக் கவனித்துப் பார்க்கிருன். லட்சுமணன் செத்துப் போகவில்லை என்பதை அறிந்து கொள்கிருன். அஞ்சினவனைப் போலவும் காணப்படவில்லையாம். மூர்ச்சை யடைந்திருக்கிருன் என்பதைத் தெரிந்துகொண்டு, 'அந்த உடம்பை எடுத்துக் கொண்டு போய் விடுவோம்' என்று துணிகிருன் ராவணன்.

அனுமனும் ராமனும் இருக்கிற அமர்க்களத்திலே இது செய்யத துணிந்த துணிவையும், இந்த மனத்துக்குள் உருவாகிக் கொண்டிருந்த கொடிய சூழ்ச்சித் திட்டத்தையும் உள்ளத்திற்கொண்டு கவிஞன்,

நஞ்சி ஞல்செய்த
நெஞ்சினுன் பாரின்மேல்
நடந்தான்

என்று ராவணன் லட்சுமணனை நோக்கி நடந்துவரும் அந்த நடையைக் குறிப்பிடுகிருன்.

பிணங்களோடு கூடிய இரத்தநீர் வெள்ளத்தைக் கடந்து வந்து லட்சுமணனது உடம்பைத் தன் இருபது கைகளாலும் தூக்கப் பார்க்கிருன். ஆனுல் அன்று வெள்ளியங்கிரி எடுத்த அந்தக் கைகளால் இந்த லட்சுமணன் என்ற பொன்மலையைத் தூக்கி எடுக்க முடியவில்லையாம்.

ராவணன் பெருமூச்சு விடுகிருன். அப்போது பளிச்சென்று எங்கேயோ ஒரு மூலையிலிருந்து அனுமன் பாய்ந்து வருகிருன். லட்சுமணனை அப்படியே தூக்கி எடுத்துக் கொண்டு தடுக்க முடியாத விசையுடன் அப்பால் போய் விடுகிருன்.

தூக்க முடியாத சுமையைத் தூக்கிப் பார்த்த ஒருவனைப் போல் ராவணன் மூச்சுத் திணறிக் கொண்டிருக்க, மூர்ச்சை தெளிந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த அனுமன் விசையாகப் புகுந்து விசையாகக் கொண்டு போய் விடுகிருன் லட்சுமணனை.

இதற்குள் லட்சுமணனுக்கும் மூர்ச்சை தெளிய, அனுமன் ராமனிடம் போகிறான்.

அப்போது ராவணனை நோக்கி வருகிறான் ராமன். தன் தம்பியை வேலால் எறிந்தது குறித்துச் சினந்து வருவதாக ஊகிக்கலாம். ராவணனும் தன் தேரைச் செலுத்திக் கொண்டு ராமனுக்கு எதிரே வருகிறான்.

ராவணன் தேரில் வர, ராமன் தரையில் நடப்பது கண்டு அனுமன் ராமனைத் தன்னுடைய தோளின் மேல் ஏறிக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறான். ராமன் உடன்பட்டதும்,

கன்று தாங்கிய
தாயென மாருதி
களித்தான்.

[மாருதி — அனுமன்.]

இந்த உவமையால் திருப்தியடைய வில்லை கவியுள்ளம். வெள்ளை வானரமாகிய அனுமன் பாற்கடலை ஒத்தானென்றும், அந்தப் பாற்கடல் நாதனை ஒத்துள்ளான் ராமன் என்றும் உவமித்துப் பார்த்தும் திருப்தியடைய வில்லையாம்.

பாற்கடல் நாதன் போல் உறங்க வில்லையே ராமன். எவ்வளவு விழிப்புடன் இருக்கிறான்! எனவே,

வேதம் ஒத்தனன்
மாருதி; வேதத்தின்
சிரத்தின்

போதம் ஒத்தனன்
இராமன்

[போதம்—ஞானம்.]

என்று அனுமனுக்கும் ராமனுக்கும் முறையே உவமை கூறி ஆறுதல் அடைகிறது கல்வியிற் பெரிய உள்ளம்.

உபநிஷதங்களை 'வேத சிரசு' என்று கூறுவதுண்டு. உபநிஷதம் தான் வேதாந்த ஞானம். வேதத்தைக் காட்டிலும் இந்த வேதாந்த ஞானம்தான் ஞான ஸ்வரூபியாகிய பரம்பொருளை உணர்த்த முயல்கிறது என்பர்.

புராணம் சொல்லும் பாற்கடலும் பாற்கடல் நாதனும், வேத வேதாந்த ஞானத்தின் மனோபாவக் குறிகள். அனுமன் தோள்மீது காட்சி தரும் ராமனைப் பாற்கடல் மீது தோன்றும் பெருமானைக் காட்டுவதைக் காட்டிலும், வேதம் தாங்கி நிற்கும் வேதாந்த ஞானமாகிய சுடர ஜோதியாய்க் காட்டுவது இங்கே கவி யுள்ளத்திற்கு உகப்பாய்க் காண்கிறது.

அந்தகார அஞ்ஞானமாகிய ராவணனோடு முதற் போர் புரியும் இந்தக் கட்டத்திலே இந்த உவமை பொருத்தமானது எனக் கருதலாம். இப்போரில் ராவணன் மகுட பங்கமாகி வெறுங் கையோடு போவது, மெய்ஞ்ஞானத் திற்கு முன் அறியாமையின் ஆடம்பரமோ, படாடோபமோ நிற்க முடியாது என்பதை அடிப்படைத் தத்துவமாகப் புலப்படுத்துகிறது எனவும் கருதலாம்.

'கடவுள், சாத்தான் (பேயரசு)' என்ற இரண்டு முக்கிய கதாபாத்திரங்களை ஆங்கில மகாகவியான மில்ட்டனின் 'துறக்க நீக்கம்' என்ற மகா காவியத்திலே பார்க்கிறோம். அப்படியே கம்பனும் அவதாரமூர்த்தியான ராமனையும் ராவணனையும் சித்திரிக்கிறான்.

சாத்தானின் பயங்கரமான சித்த சக்தியையும் பேராசையையும் செயல்—திறனையும், பழிபாவத்திற்குக் கொஞ்சமும் அஞ்சாத நெஞ்சினையும் ராவணனிடத்திலும் பார்க்கிறோம். ராவண வீரம், ஸார்ம்சத்தில் பேய் வீரம்.

இந்தப் பேய்வீரத்திலும், லட்சுமணனுடைய போர்வலி முதலான வீர அம்சங்களை வியக்கும் ஆற்றல் இருக்கிறது. எனினும் தர்மவீரத்தை ஒழித்துவிட வேண்டுமென்றே துடிக்கிறது ராவணனின் உள்ளம். எனவே, இந்த நெஞ்சை 'நஞ்சினால் செய்த நெஞ்சு' என்கிறது கவிக் கூற்று.

இந்த 'நஞ்சினால் செய்த நெஞ்சு' அறிவின் பேராற்றலும் உடையதுதான். ஆனால் இந்த அறிவு பேயறிவு, பொய்யறிவு. ராமன், மெய்யறிவு என்ற தெய்வ அறிவின் அறிகுறி. இதை நாம் நன்குணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த உணர்ச்சியோடு ராம—ராவண குணசித்திரங்களை அறிந்து கொள்ள முயல்வது நலமாகும். பேயறிவுதான் ராவண வீரத்தை 'மறம்(பாவம்)வளர்க்கும் வீரம்' ஆக்குகிறது. தெய்வ அறிவு என்ற மெய்யறிவினால் ராம வீரம் 'அறம் வளர்க்கும் வீரம்' ஆகிறது.

'அறம் வளர்க்கும் கண்ணாளன்' ஆகிறான் ராமன், அறத்தின் வேர், தயை அல்லது அருள்தான் என்பதைத் தெரிந்து ஒழுகுவதால். இந்தத் தயை எவ்வளவு அதிசயமாக ராவணன் விஷயத்திலும் பாய்ந்து செல்லப் போகிறது என்பதை இனி நாம் பார்ப்போம்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

94. முதற் பெருந் தோல்வி

முனிவர்கள் வாழ்த்துகிறார்கள். தருமம் என்ற தெய்வம் தன் அழகிய நெடிய கை தூக்கிக் கூத்தாடுகிறது. பிரமன் முதலான தேவர்கள் வானத்தை நிறைத்துக் கொண்டு கீழே நோக்கிய வண்ணமாயிருக்கிறார்கள், — 'என்ன அதிசயமான போரைப் பார்க்கப்போகிறோம்!' என்று.

பாணங்கள் படும் பாடு

ஆனால் யுகாந்த காலத்துப் பேரோசை திடீரென்று கேட்கிறது:— பிரளய கால ருத்திர மூர்த்தியின் ஆரவாரம்! நடுங்கிப் போகிறார்கள் நல்லவர் பொல்லாதவர் எல்லாருமே.

கோதண்டத்தின் நாணொலிதான் இது. ராவணனோ அஞ்சாது ஊழித் தீயை ஒத்த ஏழு அம்புகளை ஒருசேரத் தொடுத்து விடுகிறான்.

உடனே ஏழு அம்புகளையும் ஏழு அம்புகள் துண்டித்து விடுகின்றன. ஒவ்வொரு அம்பும் ஏழு துண்டுகளாகிக் கீழே விழுகிறது.

ஊழித் தீயும் நாணுமாறு தீயைக் கக்கும் ஐந்து அம்புகளைக் கோதண்டம் உதைத்துத் தள்ளுகிறது. ஐந்தையும் ஐந்து அம்புகள் வானத்திலேயே சந்தித்து அடித்துத் தள்ளி விடுகின்றன.

ராவண பாணங்கள் பத்து, ராம பாணங்கள் பத்துக்கு இரையாகின்றன, உடனே ராட்சஸப் பெருங் கடலிலிருந்து எத்தனையோ படைக்கலங்கள் புறப்படுகின்றன ராமனை நோக்கி, அலையலையாக.

இவற்றை யெல்லாம் ராம பாணங்கள் அழிக்கவே, அரக்கர்கள் மலைகளைப் பறித்து வீசுகிறார்களாம். 'மலைகளை அழிக்கிறவன் மலைகளை உண்டாக்கியும் விடுகிறான்!' என்று அந்த அழிவைச் சமத்காரமாய் அறிவிக்கிறான் கவி:

> இறுத்து வீசிய
> கிரிகளை எரியுக
> நூறி
> ஒறுத்து, மற்(று) அவர்
> தலைகளால் சிலமலை
> உயர்த்தான்!

[இறுத்து வீசிய – பிடுங்கி எறிந்த. கிரி – மலை. எரி உக – தீப்பொறி சிந்த. நூறி ஒறுத்து – பொடியாக்கி அழித்து, உயர்த்தான் – உயர்ந்து தோன்றச் செய்தான்.]

மலைகளை வீசியவர்களின் தலைகளே மலைகளாய்க் குவிகின்றனவாம்.

> குவித்தனன் அரக்கர்தம்
> சிரத்தின் குன்றமே

என்று 'பாலகாண்ட'த்தில் விசுவாமித்திரன் வேள்வி காக்கும் போதே நிகழ்ந்த துஷ்ட நிக்கிரக அதிசயம்தான், மேலும் பெரிய அளவில் இங்கே ராவணன் கண் முன்பும் நடைபெறுகின்றது.

இரு பெருங் கடல்கள் ஒன்றையொன்று எதிர்க்கின்றன. ராட்சஸக் கருங்கடலும், வானரப் பாற்கடலும்தான். இந்தச் சமுத்திரம் வற்றிப் போகாதபடி பார்த்துக்கொண்டே ராமன் அந்தக் கடலை வற்றடிக்கிறான்.

வாகனம் படுத்தும் பாடு

இடப் பக்கமும் வலப் பக்கமுமாகச் சாரி திரிந்து அனுமன், வட்டமாக ஓடும்

போதே பல கோணங்களிலும் ராட்சஸப் பெரும் படையை ராம பாணங்கள் தாக்குவதற்குப் பேருதவி புரிகின்றான். சாரி வேகம் மேலும் மேலும் அதிகரிக்கிறது.

'கீழே யிருந்து தானே ராமன் போர் புரிகிறான்' என்று எண்ணுகிறவர்களுக்கு, 'வானத்தி லிருந்தும் ராம பாணங்கள் பொழிகின்றன!' என்று தோன்றுமாறு செய்துவிடுகிறானும் அனுமன்.

ராவணனுடைய பத்து முகங்களுக்கும் எதிரே பத்து ராமர்கள் தோன்றி நின்று தொந்தரவு கொடுப்பது போலவும் தோன்றுகிறதாம், அனுமன் சாரி திரியும் வேகத்திலே.

வஞ்சனை அரக்கர்களின் வெஞ்சின விழிகள் தோறும் திரிகிறான் அனுமன், என் செய்வர்! உள்ளம் அப்படியே வெதும்புகிறது.

ராமனுடைய இந்த அனும வாகனம் படுத்துகிற பாடு இது:

இம்ப ரான்எனில்,
விசும்பினன் ஆகும்ஓர்,
இமைப்பில்;
தும்பை சூடிய
இராவணன் முகந்தொறும்
தோன்றும்;

வெம்பு வஞ்சகர்
விழிதொறும் திரியும்; மேல்
நின்றான்

அம்பின் முன்செலும்,
மனத்திற்கும் முன்செலும்
அனுமன்.

[இம்பரான் எனில் – கீழே யிருந்து தானே போர் செய்கிறான் என்று நினைத்தால். விசும்பினன் ஆகும் – வானத்தில் உள்ளவன் ஆவான். இமைப்பில்–இமைப் பொழுதில். தும்பை சூடிய – தும்பை மாலை சூடிவந்து போர் செய்கிற. வெம்பு –மனம் வெதும்புகிற. மேல் நின்றான் – மேல் ஏறி யிருக்கிற ராமன். அம்பின் முன் செலும்–ராம பாணத்தைக் காட்டிலும் முற்பட்டுச் செல்லும். மனத்திற்கும் முன் செலும்–(ராமனுடைய) உள்ளத்திற்கும் முற்பட்டுச் செல்லும்.]

அனும வாகனத்தின் வேகம் அரக்கர்களையும் அரக்கர்கோனையுமே வியப்படை



யச் செய்கிறது என்பதில்லை; மேலே ஆரோகணித்திருக்கும் ராமனையும் வியக்கச் செய்து விடுகிறதாம்.

'கடிய வேகச் சுடுசரம்' என்று சொல்லப்படும் ராம பாணத்தைக் காட்டிலும் வேகமாக அங்கு மிங்கும் போய் நின்று கொண்டு அநுமன், ராமன் பாணம் போடுவதற்குத் தக்க உதவி செய்கிறான்.

இது மட்டுமா! 'மனத்திற்கும் முன் செலும் அநுமன்' என்று வருணிக்கப் படுகிறானல்லவா! ராமனுடைய கருத்தை அவனுக்கும் முன்பே தெரிந்துகொண்டதுபோல் அவ்வளவு வேகமாக அங்கும் இங்கும் எங்கும் திரிகிறானும், அந்தக் களத்திலே.

கரி பரி தேர் காலாள் என்று சொல்லப்படும் நால் வகைப் படைகளும் அழிந்து கிடக்கின்றன :

ஆர்ப்ப டங்கின
வாயெலாம்; அழற்
கொழுந்(து)
ஒழுகப்

பார்ப்ப டங்கின
கண்ணெலாம்; பல்வகைப்
படைகள்

தூர்ப்ப டங்கின
கையெலாம்; தூளியின்
படலைப்

போர்ப்ப டங்கின
உலகெலாம்; முரசெலாம்
போன.

[ஆர்ப்பு அடங்கின வாயெலாம்—ராட்சஸர்களின் வாய்களெல்லாம் ஆரவாரம் செய்யாமல் அடங்கி விட்டன. அழற் கொழுந்து – அழலின் கொழுந்து. ஒழுகப் பார்ப்பு–ஒழுகுமாறு பார்க்கும் பார்வைகள். படைகள் தூர்ப்பு அடங்கின கையெலாம் – கைகளெல்லாம் படைக்கலங்களை வீசிக் கொண்டிருக்குமே. அந்தச் செயலை ஒழிந்தன. படலை – படலங்கள். போர்ப்பு அடங்கின–போர்த்துக் கொண்டிருந்ததை ஒழிந்தன. உலகெலாம் – அந்தக் களம் முழுவதும். முரசெலாம் போன – போர் முரசங்களெல்லாம் ஒலியடங்கிக் கிடந்தன.]



அநும வேகத்தோடு ராமபாண வேகமும் சேர்ந்து இப்படி ராட்சஸப் பெருங் கடலை வற்றடிக்க; அரக்கர்கோன் ஒருவனே எஞ்சி நிற்கிறான் :

நின்ற தேரோடும்
இராவணன் ஒருவனும்
நிற்கக்

கொன்று வீழ்த்தன(து)
இராகவன் சரமெனும்
கூற்றம்.

[இராகவன் சரம்–ராமபாணம். எனும் கூற்றம் – என்னும் யமன்.]

அந்தப் போர்க்களத்தையும் பிணக் குவியல்களையும் கண்டான்;

மூரி வெஞ்சிலை
இராவணன் அராவென
முனிந்தான்.

[மூரி வெஞ்சிலை–பெரிய கொடிய வில். அரா என – பாம்பு போல. முனிந்தான் – கோபமாய்ச் சீறினன்.]

வில் நாணி புரண்டு தோளிலே 'இதுவும் ஒரு அழகு' என்று சொல்லுமாறு பொருந்தக் காணப்படுகிறுன் ராவணன். உடனே வில்லை வளைத்து இரண்டு அம்புகளைத் தேர்ந்தெடுக்கிறுன்.

ராமனுடைய அழகான தோள்களில் போய்த் தைத்து அழுந்தும் படி பிரயோகிக்கிறுன்:

திரண்ட வாளிகள்
சேவகன் மரகதச்
சிகரத்(து)

இரண்டு தோளினும்
இரண்டுபுக்(கு) அழுந்திட
எய்தான்.

[வாளிகள் – அம்புகள். சேவகன் – வீரனை ராமன். மரகதச் சிகரத்து இரண்டு தோளினும் – மரகத சிகரம் போன்ற இரண்டு தோள்களிலும். புக்கு அழுந்திட – அழுந்தித் தைக்குமாறு.]

பாணங்கள் தன்னுடைய தோள்களில் அழுந்தியதை ராமன் லட்சியம் செய்யவே இல்லை. முகத்தில் வருத்தம் சிறிதும் தோன்றவில்லை.

இயற்கையாகச் 'சிரித்த தாமரை' போலிருக்கும் இந்த முகத்திலே இப்போது பூக்கிறது ஒரு புது முறுவல்.

'அந்த வில்தானே அப்படியெல்லாம் சேட்டை செய்கிறது!' என்று எண்ணியவன் போல் அம்பு போட்டு அந்த வில்லைத் துண்டாக்கிவிடுகிறுன். கருத்து – வேகத்திற்கும் ராமபாண வேகத்திற்கும் இசைந்து பணிபுரிகிறது அனுமன் வேகம் என்பதைச் சொல்லவா வேண்டும்!

இப்போது அந்தத் தாமரைக் கண்களையும் 'முறுவல் எய்திய முக'த்தையும் அந்த அனாயாஸ வீரச் செயலையும் இந்தக் கண்ணுடியில் பார்த்துக் கொள்ளுங்கள்:

முறுவல் எய்திய
முகத்தினன் முளரியங்
கண்ணன்,

மறுவி லாததோர்
வடிக்கணை தொடுத்(து)உற
வாங்கி,

இறுதி எய்துநாள்
கால்பொர மந்தரம்
இடையிட்(டு)

அறுவ தாம்என,
இராவணன் சிலையினை
அறுத்தான்.

[முளரி - அங்கண்ணன் – தாமரைக் கண்ணனை ராமன். மறு – குற்றம். வடிக் கணை – கூரிய அம்பு. உற வாங்கி – நன்ருக வளைத்து. இறுதி எய்து நாள் – ஊழி முடிவில். கால் பொர – ஊழிக் காற்று வீசும்போது. மந்தரம் – மந்தர மலை. இடையிட்டு அறுவதாம் என – நடுவிலே அற்றுப் போகிறது என்று சொல்லும்படி.]

ராவணன் வேறொரு கொடிய வில்லை எடுத்து நாணேற்றப் போகிறுன். ஆனல் அதற்கும் முன்னே அனுமன் வேகமும் ராம பாணத்தின் வேகமும் இம் முயற்சியைப் பாழாக்கி விடுகின்றன:

மாற்று வெஞ்சிலை
வாங்கினன், வடிம்புடை
நெடுநாண்

ஏற்று முனம்,
இடையறக் கணைகளால்
எய்தான்.

[மாற்று வெஞ்சிலை – வேறொரு கொடிய வில்லை. வாங்கினன் – எடுத்து. வடிம்பு உடை – தழும்பை உண்டாக்கக் கூடிய, நெடு நாண் – நீண்டநாண். ஏற்றுரு முனம் – ஏற்றுவதற்கு முன்னம். இடையற – ராவணனுடைய வில் நடுவிலே அற்றுப் போகும்படி. கணைகளால் எய்தான் – ராமன் தன் பாணங்களைப் பிரயோகித்தான்.]

ராவணன் முகத்திலே முனிவு அதிகரிக்கிறது. ராமன் முகத்திலோ முறுவல் அப்படியே இருக்கிறது.

ராமபாணம் ராவணனை மகுடபங்கம் செய்து, அந்த மகுடத்தைக் கடலிலே வீழ்த்தி விடுகிறது. இந்த நிகழ்ச்சிக்குப் பின் ராவணன் செய்வதென்ன?

ராமன் எதிரேயே நின்று கொண்டிருக்கிருனும் சிறிது நேரம். ஏன்? எப்படி?



95. படுகளமா, பாடசாலையா?

மணிமுடி இழந்த ராவணன் அந்தப் படுகளத்திலே—அந்த இடத்திலேயே—நின்று கொண்டிருக்கிறான். ராமனுக்கு எதிரேதான் நின்று கொண்டிருக்கிறான். இன்னது செய்வது—இன்னது செய்கிறோம்—என்பது தெரியாமலே நிற்கிறான்.

என்ன பாடம்!

ராம பாணத்தின் வேகத்தையும் ஆற்றலையும் பார்த்துப் பார்த்து வியந்திருக்கிறான்; சிறிதும் பயந்திருக்கவில்லை. திகைத்தான், பகைத்தான்;—இதற்கு முன் இப்படித் திக்பிரமை அடைந்ததுமில்லை.

எப்படிப் பொங்கிப் பரந்திருந்தது அரக்கர் சேனைப் பெருங்கடல்! அந்த வற்றாத கடலும் வற்றிப் போய்விட்டது. செத்தார்கள்; அல்லது சிதறடிக்கப்பட்டார்கள்.

அந்தக் கடலிடையே வடவைக் கனல் போல் கொந்தளித் தெழுந்த கோபாவேசம், வீராவேசம் எல்லாவற்றையும் ஊழித் தீபோல் உண்டு விட்டது ராம பாணம். ராவண கோபத்திற்கும் கொதிப்பிற்கும் எல்லை இருக்க முடியுமா?

ராவணனுடைய வில்லும் துண்டிக்கப்பட்டது; எடுக்க எடுக்கத் துண்டிக்கப்பட்டது. பிடித்த குடையும் முறிக்கப்பட்டது. பறந்த கொடியும் அறுந்து விழுந்தது; இரத்தச் சேற்றில் தோய்ந்து கிடந்தது.

தேர், குதிரை இழந்தது. ராவணன் கவசம் இழந்தான். ஏறஏறத் தேர்களை இழந்த வண்ணமாயிருந்தான். சேமத் தேர், சேம வில் எல்லாம் இழந்தான். என்ன தவிப்பு! ஆ, என்ன தத்தளிப்பு!

இந்த நிலையில் ராவணனை மகுட பங்கமும் செய்து விட்டது ராம பாணம். ‘மகுட மணிகளைக் கவர்ந்து சென்றானே வானரர்கோன்’ என்று அப்போது வருந்திய உள்ளம், இப்போது என்ன பாடு பட்டிருக்க வேண்டும்!

ராமன் முகத்திலே முறுவல்தான். பரிகாச முறுவல் அன்று. ‘சிரித்த’ செந்தாமரை போலிருக்கும் அந்தக் கண்ணிலும் முகத்திலும் கருணை ததும்புவது போன்ற அந்தப் புன்சிரிப்பைத்தானே பார்க்க முடியும்! ராவணனுக்கோ கொதிப்பு அதிகரிக்கிறது, அந்தக் குறுநகையைப் பார்க்கப் பார்க்க!

உதய சூரியனைக் கண்டதும், ‘அதோ ஒரு செங்கனி!’ என்று அனுமன் பாய்ந்தானாமே, அந்த விசையுடன் ராம பாணம் பாய்ந்து ராவண மகுடத்தைப் பறித்துக் கொண்டு போய்க் கடலிலே வீழ்த்தி விட்டதாம்.

சுக்கிரீவன் பாய்ந்து வந்து முடிமணிகளைக் கவர்ந்து சென்றதும்,

‘நின்றார்கள் தேவர்
கண்டார்’ என்பதோர்
நாணம் நீள,—

இலங்கை வேந்தன் இருந்தும் இறந்தவனாகி விட்டதாய்க் கவி வருணித்ததுண்டு. வானரசேனை காண அப்போது ஏறியிருந்த அந்த இடத்திலிருந்து ராவணன் பளிச்சென்று கீழே இறங்கிப் போய் விட்டதாகவும் வருணித்திருக்கிறான் கவி.

ஆனால் இப்போது தேவர் காண்பரே என்ற அந்த நினைவு கூட இல்லை. நாணம் அப்படி நீண்டு போகாமல் உள்ளுக்குள்ளே ஆழ்ந்து போய் வேலை செய்கிறது. அவ்வளவு அவசரமாக அந்த இடத்தை விட்டுப் போய் விடவும் கால் எழவில்லையாம்.

ராமன் சொல்வதையும் கேட்டுக் கொண்டே நிற்கப் போகிறான். ஏன், உலகம் தன்னை நோக்கி ஏதோ ஆரவாரம் செய்வது போலவும் தோன்றுகிறது. அதையும் கேட்டுக் கொண்டுதான் நின்று கொண்டிருக்கிறான்—ஏதோ ஒரு மந்திரத்தால் எப்படியோ கட்டுண்டு நிற்பவனைப் போல.

'அறம் என்ற சட்டத்தை மீறியவர்களுக்கு உரிய தண்டனை இது!' என்றுதான், இவனுல் ஹிம்ஸிக்கப்பட்ட உலகம் — அடக்கி ஆளப்பட்ட உலகம் — கூச்சல் போடுகிறதாம், காதிற்குள்ளே இடி போல் இடிக்கிறதாம் இப்படி உலகமெல்லாம் கூறுவது.

இப்பொழுது ராவணன் எப்படி நிற்கிறான்! எப்படித்தான் நின்று கொண்டிருக்க முடியும்? கண்டு காட்டுகிறது கவிதை:

அறம்க டந்தவர்
செயல்இ(து) என்(று) உலகெலாம்
ஆர்ப்ப,
நிறம்க ரிந்திட,
நிலம்விரல் கிளைத்திட
நின்றான்.
இறங்கு கண்ணினன்,
எல்அழி முகத்தினன்,
தலையன்,
வெறுங்கை நாற்றினன்,
விழு துடை ஆல்அன்ன
மெய்யன்.

[அறம் கடந்தவர் – அறத்தை மீறிய கொடியவர்கள். ஆர்ப்ப – ஆரவாரிக்க. நிறம் கரிந்திட – நிறம் முன்னிலும் கறுத்துப் போக, நிலம் விரல் கிளைத்திட – நிலத்தைக் கால் விரல் கிறிக்கொண்டிருக்க. இறங்கு கண்ணினன் – கீழே பார்த்துக் கொண்டிருக்கும் கண்களை உடையவன். எல் அழி முகத்தினன் – ஒளி அழிந்த முகத்தை உடையவன். வெறும் கை நாற்றினன் – வெறும் கைகளைத் தொங்கவிட்டிருப்பவனாய். விழுதுடை ஆல் அன்ன மெய்யன் – விழுதுகளையுடைய ஆலமரத்தை ஒத்த உடம்பையுடைய ராவணன்.]

அந்தக் கவிழ்ந்த முகத்தைப் பாருங்கள். எப்படி ஒளி அழிந்திருக்கிறது! அந்த நிறம் முன்னிலும் கறுத்துக் காண்கிறது. அகத்தின் அழகுதானே இது!

கண்கள் கீழே பார்க்கின்றன. அங்கே நிலத்தைக் கிறுகிறது கால் விரல். ஆயுதம் இழந்த வெறுங் கைகள் தொங்குகின்றன, ஆலமரத்தின் விழுது போல.

உள்ளத்திற்குள்ளே மனச் சாட்சியாக இடிக்கிறது உலகத்தின் கதறல்,—அறத்தின் முழக்கம். காதில் இசைக்கிறது ராமன் வாசகம்.

எந்த விதிக்கும், எந்தக் கதிக்கும் சித்தமாகி விட்டான் ராவணன். முடி பறித்த ராமபாணம் உயிரையும் பறித்துக் கொண்டு போகட்டும்; அதுவும் நன்றே! ராவணனா அஞ்சுகிறவன்?

நெஞ்சுக்கு நேரே ராமபாணம் வரும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தான். ஆனல் இப்போது வந்து விழுவது, அந்தக் 'கடிய வேகச் சுடுசரம்' அல்ல.

என்ன வைத்தியம்!

ராமன் வாசகத்தை வகுத்துக் கூறுவதற்கு முன் தொகுத்துரைக்கப் போகிறது கம்பன் கவிதை:

நின்ற வன்நிலை
நோக்கிய நெடுந்தகை,
இவனைக்
கொன்றல் உன்னிலன்
'வெறுங்கைநின் றான்'எனக்
கொள்ளா,



'இன்(று)அ விந்தது
போரும்உன் நிமை!' என்(று)
இசையோ(டு)
ஒன்ற வந்தன
வாசகம் இனையன
உரைத்தான்.

[நெடுந்தகை – பெருங்குணமுள்ள ராமன். கொன்றல் உன்னிலன் – கொல்ல நினையாதவனாகி. கொள்ளா – கொண்டு. ஒன்ற–பொருந்த. வந்தன வாசகம்–வந்த வாசகம். இனையன – இந்த வாசகங்களை.]

ராவணனை நோக்கி ராமன் கூறிய வாசகம் ஐந்து கவிகளில் விவரிக்கப்படுகிறது.



அறத்திறன் அன்றி வெற்றி பெறுவது இயலாத காரியம் என்று தொடங்குகிறது ராம வாசகம். 'இந்த உண்மை உள்ளத்திலே உறுதியாகக் கொள்ளத் தக்கது' என்ற பீடிகையோடு செல்லுகிறது.

தர்மாவேசம் இரக்கமாகத் தன்னை வெளியிட்டுக் கொள்வதுபோல் கோபாவேசமாகவும் பேசுகிறது:

பறத்தி நின்னெடும்
  பதிபுக் கிளையோடும்;
    பாவி!
இறத்தி; யான் அது
  நினைக்கிலன், தனிமைகண்(டு)
    இரங்கி.

[பறத்தி—பறந்தோடிப் போ. நின் நெடும் பதி புக் கிளையோடும்—உன்னுடைய பெரு நகரிலுள்ள உறவினரோடும் போய்ப் பதுங்கிக் கொள்ளும்படி. பாவி இறத்தி—பாவியே, நீ இப்போதே என் பாணத்திற்கு இரையாக இறந்திருப்பாய். நினைக்கிலன்—நினைக்கவில்லை.]

ராவணனுடைய குலத்தினரும் உறவினருமாகிய எத்தனையோ பேர் இன்னும் ஊரில் இருக்கத்தான் செய்கிறார்கள். வற்றாத சேனைக் கடல் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. படைக்கலங்களும் அபரிமிதமாக இருக்கின்றன. 'அந்த வசதிகளையெல்லாம் ஒரு சேரத் திரட்டிக்கொண்டு, போர் புரிய வல்லமையிருந்தால், வந்து பார்' என்கிறான் ராமன்.

'அப்படிச் செய்யவில்லையென்றால், ஒளித்துக்கொள்' என்றும் குறிப்பிடுவதுபோல் பேசி விடுகிறான். இப்போது ராவணன் இருக்கும் நிலையிலும் இந்த

வைத்தியம் அவசியம்தான் என்று கருது கிறது ராமனது கருணை யுள்ளம்.

ராமபாணம் போலவே புறப்படுகிறது ராம வாசகம்:

சிறையில் வைத்தவள்
தன்னைவிட்(டு), உலகினில்
தேவர்
முறையில் வைத்து, நின்
தம்பியை இராக்கதர்
முதற்பேர்
இறையில் வைத்து, அவற்(கு)
ஏவல்செய்(து) இருத்தியேல்,
இன்னும்
தறையில் வைக்கிலன்,
நின்தலை வாளியில்
தடிந்து!

[வைத்தவள் — வைக்கப்பட்ட சீதை. தேவர் முறையில் வைத்து—தேவர்களை அவரவர்க்கு உரிய பதவியில் வைத்து. இராக்கதர் — அரக்கர்களுக்கெல்லாம். முதற்பேர் இறையில் வைத்து — முதன்மையான பேரரசனாக வைத்து. அவற்கு— அந்த விபீஷணனுக்கு. இருத்தியேல்— இருப்பாயானால். வைக்கிலன் — வைக்காமல் இருப்பேன். வாளியில் தடிந்து— என் அம்புகளால் அறுத்து.]

இந்த 'கடிய வேகச் சுடு' மொழியும் கருணை வாசகம் தான். ராவணனைத் தீமை துடைத்துத் திருத்தக் கூடுமோ என்று பார்க்கும் அருள் தான், இரக்கம்தான்.

சோனைமாரிக் குரலில் மேகம் பேசுவதெல்லாம், 'நீங்கள் வாழ உலகினில் பெய்யப் போகிறேன்' என்பது தானே!

ராவணனுடைய நன்மையை ராவணனுக்கு விளங்கக் கூடிய பாஷையில் பேசிப் பார்க்கலாமா என்ற முயற்சியைத் தான் இப்போது மேற்கொள்ளுகிறது ராமனுடைய தர்மாவேசம். எனவே, மேலும் கடுமையாக வருகிறது வார்த்தை.

சமாதான முயற்சியையும் 'ராவண பாஷை'யில் வற்புறுத்திய ராமன், 'இதற்கு இஷ்டமில்லையென்றால், உனக்குள்ள வலிமையெல்லாம் கொண்டு விரைவில் போர் செய்து பார்த்து விடு' என்பதையும் வற்புறுத்திக் கூறுகிறான்.

ஆனால் 'போரில் இனி நாமும் வெல்லக் கூடும் என்ற அந்த நப்பாசையை மட்டும் விட்டு விடு' என்கிறான்:

'நில்லையா!' என
நேர்நின்று பொன்றுதி
எனினும்
நல்லை ஆகுதி;
பிழைப்(பு) இனி உன்(டு)என
நயவேல்.

[என — என்று சொல்லி. நேர் நின்று எனக்கு நேரே வந்து நின்று போர் செய்து. பொன்றுதி — உயிர் விடுவாய். எனினும் — அப்படி நீ செய்தாலும். நல்லை ஆகுதி — நல்லவனாவாய். பிழைப்பு இனி உண்டு என நயவேல் — போர் செய்தும் பிழைத்துக் கொள்ளலாம் என்ற ஆசை மாத்திரம் கொள்ளாதே.]

'அறவழிக்குத் திரும்பி விடு அல்லது போரில் அழிந்து போய் விடு — இந்த இரண்டிலே ஒன்றில் துணிந்து நிற்பதைத் தவிர வேறு நீ என்னதான் செய்யக் கூடும்! ஒன்றும் இல்லையே' என்கிறான் ராமன்.

முடிவுரை

இப்படி யெல்லாம் வாய் பேசிய போதிலும், ராவணனுக்கும் எப்படியாவது அனுக்கிரகம் செய்யவே விரும்புகிறது கருணை யுள்ளம். ராவணனை இழிவு படுத்துவதல்ல ராமன் நோக்கம்; ராவணனையும் திருந்தச் செய்வதுதானே ராமனுக்கும் உண்மையான வெற்றி!

எனவே, 'இன்று போய் நாளை வா' எனக் கூறி முடிக்கப் போகிறான். எப்படியாவது கொஞ்சம் சாவகாசம் கொடுப்பது நல்லதுதானே.

தன்னுடைய தோல்வியையும் எதிரியின் நிலையையும் ஆற அமரச் சிந்திப்பதற்காவது ராவணன் போய்வர வேண்டியது தானே! இப்படி நினைத்துப் பார்க்கிறது ராமனுடைய பேராண்மை.

வால்மீகியின் கதைப் போக்கைத்தான் கம்பனும் உபயோகித்துக் கொள்கிறான். ஆனால் இந்தக் கம்ப சித்திரமும் ஒரு புதிய சிருஷ்டிதான் என்று சொல்லும் படி இந்தக் கட்டத்தை அமைத்திருக்கிறது கவிச் சிற்பத் திறன்.

'இன்று போய்...... நாளை வா' என்பது, கம்பன் காவியத்தில் ஐந்து கவிகளால் அமைந்து ராமன் பேச்சிற்கும் பேராண்மைக்கும் பெருங் கருணைக்கும் ஒருங்கே மகுடமாக அமைந்து விடுகிறது.

மகுடம் இழந்த ராவணனுக்கும் ஒரு புது மகுடம் அளிக்கத் துணிந்த வண்மையையும் சொல்லாமல் சொல்லப் போகிறது இங்கே ராமன் குரல். எப்படி என்று பார்க்கலாம்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

96. கோசலம் — ஆள்வதா, கொடுப்பதா?

சேனைப் பெருக்கத்தையும் கொலைக் கருவிகளையும், தன்னுடைய கொடிய வலிமையையுமே நம்பி வாழ்ந்து அரசாட்சி செலுத்தி வந்தவன் ராவணன். எந்த ஸ்தூல சக்திகளை அடக்கி ஆண்டு தன் கொடிய அதர்ம அரசை உருவாக்கியிருந்தானே, அந்தச் சக்திகளின் அறிகுறியாகப் போர்க்களத்தை அடைத்துக் கொண்டிருந்த ராட்சஸ சேனைப் பெருங் கடல் இப்போது எங்கே!

கருணை காட்டும் வாய்ப்பு

வற்றி வறண்டு போய் விட்டது. செத்துப் போனது தவிர, அங்கும் இங்கும் சிதறடிக்கப்பட்டு ஓடிப் போனதும் உண்டு. 'நம்பிய பாய்மரம் பழுது' என்று இப்போதாவது தெரிந்து கொள்கிறான், ஆசைத் திரைகடல் ஓடும் அரக்கர் கோன்!

ராமபாணம் செய்த மகுடபங்கம், அந்த ஆட்சியின் அடிப்படை கலகலத்து விட்டது என்பதற்குத் தானே அறிகுறி! நிலையில்லாத இந்த நிலையில் ராமன் கேட்கிறான்,

> **ஆள யாஉனக்(கு)**
> **அமைந்தன?**

[யா – யாவை.]

என்ற ஒரு கேள்வியை.

'உன் ஆட்சிக்கு அஸ்திவாரமாக இருந்த அந்தப் படைப் பலம் இப்போது எங்கே! கொஞ்ச நேரத்திற்கு முன் நெருங்கி நின்று கொண்டிருந்த சேனைகளெல்லாம் சண்டமாருதம் வீசிய பூளைப் பூண்டுகள் போல் பறந்து விட்டனவே!— இந்த அதிசயத்தை நீயும் பிரத்தியட்சமாகக் கண்டாயே' என்கிறான்.

> **ஆள யாஉனக்(கு)**
> **அமைந்தன? மாருதம்**
> **அறைந்த**
> **பூளை ஆயின**
> **கண்டனை!**

[பூளை – பூளைப்பூண்டு.]

இது குறித்து ஆலோசிக்க அவகாசம் வேண்டுமே! அதற்காக 'இன்று போய் நாளை வா' என்கிறான். இது கருத்தாயினும் 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்பது ராமன் வாசகம்; 'சமாதானத்திற்கு இன்றே, இப்போதே நான் தயார்' என்பது குறிப்பு.

நன்றாக ஆலோசித்துப் பார்த்தபின் 'போர் வேண்டாம்; சமாதானமே நல்லது' என்ற தீர்மானத்துடன் ராவணன் வருவதற்கும் அவகாசம் கொடுக்கிறான்; மேலும் பிரமாதமாகப் படைப் பலத்தைப் பெருக்கிக் கொண்டு போருக்கு வருவதற்கும் அவகாசம் கொடுக்கிறான்.

இது ராமன் கருணை.

> **'நாளை வா' என**
> **நல்கினன்**

என்பது கவிக் கூற்று. 'நல்குதல்' என்றால் 'கொடுத்தல்'—'அருளுதல்'.

'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று ராமன் கருணை செய்ததாய்க் குறிப்பிடுவதில், ராவணன் திருந்தித் திரும்பி வரவேண்டும் என்ற தனிப் பெரு நோக்கம் தொனிக்கிறது. அப்படித் திருந்தி விட்டால் ராமன் கருணைக்கு இலக்காவது திண்ணம்.

கருணை, காட்டக் கூடிய தியாகம்

இனி, ராவணன் திருந்தித் திரும்பினலும், லங்கா ராஜ்யம் ஏற்கெனவே



ராமன் கொடுத்த வாக்கிற்கு இணங்க விபீஷணனுக்குத் தானே கிடைக்கும்! 'ராவணனுக்குக் கொடுக்க என்ன இருக்கிறது!' என்று கேட்பவர்களும் உண்டு.

இந்தக் கேள்விக்கு விடையாக, திருந்தி வழிப்படுகிறவன் ராஜ்ய ஆசையோடு தானே திரும்பி வரப்போகிறான்! வழிபடத் தானே வருவான்—என்ற கேள்வியைக் கேட்கலாம்.

எனினும், இறைவன் கருணை பரமபத ராஜ்யத்தை நாடுகிறவர்களுக்கும் கூட இந்த உலகச் செல்வங்களையும் வழங்குகிறது என்று பக்தி-மதம், நம்பிக்கை-மதம் சொல்லுகிறது.

தருமம் என்ற மகாராஜ்யத்தையே நாடி வந்து 'உன் அடி சூடும் அரசையே விரும்புகிறேன்' என்ற விபீஷணனுக்கும் ராமன் கருணை லங்கா ராஜ்யத்தை வழங்கியதல்லவா! அந்தக் கருணை மனம் திருந்திய ராவணனுக்கு 'உனக்குக் கொடுக்க ராஜ்யம் இல்லையே, என் செய்வது!' என்று கையை விரித்துவிடுமா?

சற்றுப் பொறுங்கள். பாட்டைப் பாடிப் பாருங்கள்; பாடி அந்தக் குரலைக் கேட்டுப் பாருங்கள்:

'ஆள யாஉனக்(கு)
அமைந்தன? மாருதம்
அறைந்த
பூளை ஆயின
கண்டனை; இன்றுபோய்ப்
போர்க்கு
நாளை வா' என
நல்கினன், நாகிளங்
கமுகின்
வாளை தாவுறு
கோசல நாடுடை
வள்ளல்.

[நாகு இளங் கமுகின் — மிக்க இளமையுள்ள கமுக மரத்தில். வாளை — வாளை மீன். தாவுறு — தாவிப் பாயும் நீர் வளம் நிறைந்த. கோசல நாடு உடை வள்ளல் — கோசல நாட்டை உடைய வள்ளலாகிய ராமபிரான்.]

நல்கியவன் யார்! வள்ளல். எப்பேர்ப் பட்ட வசதியுள்ள வள்ளல், தெரியுமா! 'நாகிளங் கமுகின் வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்' என்பது கவிக் கூற்று.

இந்த வள்ளல் இலங்கையை விபீஷணனுக்குக் கொடுத்துவிட்டால் என்ன! ராவணன் திருந்தித் திரும்பினால் கொடுப்பதற்கு ராஜ்யம் இல்லையா! அரண்மனைக் கட்டிடத்திலேயே உலர்ந்த விறகைக் கண்டு பிடித்தான் கர்ண வள்ளல் என்று சொல்லுகிறார்களல்லவா! ராமனோ,

கோசல நாடுடை
வள்ளல்

— இல்லையா!

ஆம்; கொடுக்கக் கோசல நாடு இல்லையா வள்ளல் வசமாக ? வனவாச காலம் முடிந்ததும் உடைமை கிடைத்துவிடுமே. இத்தகைய தியாகம் தானே ராம வீரம் என்ற மகா விருட்சத்தின் கனி!

கம்பனது 'ராமாவதார' இதிகாசத்திற்கு இந்தக் குறிப்புப் பொருளும் பொருத்தமானதுதான்: அவதார மூர்த்தியின் குணசித்திரம் மானுடத்தின் வெற்றியாக மலர்வதைக் காண்கிறோம், கம்ப சித்திரத்திலே.



கம்பனும் வால்மீகியும்

தமிழ் மக்களது நாவிலும் நெஞ்சிலும் வாழ்க்கையிலும் வளர்ந்து வருகின்றன கம்பன் கவிதையும் ராமன் குணதிசயமும். வால்மீகியின் உத்தம புருஷன், கம்பனுக்குப் புருஷோத்தமனாகிய பகவானாக வளர்ந்திருப்பதுடன், உத்தம புருஷன் என்ற அந்த நிலையிலும் 'மானுடம் வென்றது' என்று சொல்லத் தக்க லட்சியத்தை நோக்கி வளர்ந்த வண்ணமாயிருக்கிறான்.

வால்மீகியின் தர்ம மூர்த்தி, ஸத்ய மூர்த்தி, அந்தத் தர்ம — ஸத்யக் காதலில் ஊன்றி வளரும் தியாகமூர்த்தியாகிறான், கம்ப சித்திரத்திலே. வால்மீகத்தில் எவ்வளவு இயற்கையாகக் குணாதிசயம் வளர்கிறதோ, அவ்வளவு இயற்கையாகக் கம்பனிலும் இந்தக் குணாதிசயம் வளர்ந்தோங்குகிறது.

ராமனுடைய ஒப்பற்ற கருணை வால்மீகத்திலும் வற்புறுத்தப்படுகிறது. 'இன்று போய் நாளை வா' என்ற கருணை வாசகமும் வால்மீகத்தில் காணப்படுகிறது.

'இன்று போய நாளை உன் சேனையோடு வா' என்று வால்மீகத்தில் வருவதற்கும், 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று கம்பராமாயணத்தில் வருவதற்கும் வித்தியாசம் இல்லை. எனினும்,

நாளை வாஎன
நல்கினன், நாகிளங்
கமுகின்
வாளை தாவுறு
கோசல நாடுடை
வள்ளல்

என்ற கம்பன் வாக்கிலே வால்மீகியின் உத்தம புருஷனை மேலும் ஒரு புதிய பெருநிலையில் பார்க்கிறோம் என்ற அதிசய உணர்ச்சி உண்டாகத்தான் செய்கிறது.

'பேராண்மை' என்று தொடங்கும் ஒரு குறளுக்குப் பரிமேலழகர் விசேஷ உரை கூறும்போது, 'உபகாரியாம் தன்மை' யாவது இத்தகையது என்று ஓர் உதாரணம் காட்டுகிறார். 'இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை (சேனை) முழுதும் படத் தமியனாய் அகப்பட்டானது தனிமை நோக்கி, அயோத்தியர் இறை (ராமன்) மேல் செல்லாது "இன்று போய் நாளை நின் தானையோடு வா" என விட்டாற் போல்வது' என்பது பரிமேலழகர் வாக்கு. இது வால்மீகி சித்திரத்திற்கு இசைந்ததொரு விளக்கம்தான்.

எதிரிக்கும் சமயத்தில் உபகாரியாகும் தன்மை பேராண்மை யென்பதில் ஐய

யில்லை. ஆனால் இந்த வால்மீகி சித்திரத்திலே, ராவணன் இலங்கைக்குப் போய்க் களைப்பாறி மறுநாள் இரதம் ஏறி வில் முதலிய ஆயுதங்களுடன் திரும்பி வருவதைத் தான் ராமன் எதிர்பார்க்கிறான்.

'அப்பொழுது இரதத்தில் இருந்தபடியே நீ என் வல்லமையைப் பார்க்கலாம்' என்று கூறி முடிக்கிறான் வால்மீகி-ராமன். கம்ப சித்திரத்திலோ, 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று வாய் சொன்னபோதிலும், அந்த எதிரி மறுபடியும் போராட வராமல் மனம் திரும்பிச் சீராட வரவேண்டும் என்று ஆசைப்படுகிறது வள்ளலின் கருணை.

விபீஷணனோடு எழு சகோதரர்களாகி விட்ட ராம குடும்பத்திலே எட்டாவது சகோதரனாக வந்து சேர ராவணனுக்குக் கூட இடம் உண்டு, உரிமை உண்டு. 'இது நிறைவேறப் போவதில்லையே' என்ற ஏக்கம் தொனிக்கிறது,

நாளை வா என
நல்கினன்

என்ற வாக்கிலே.

ராவணனையும் தன் சகோதரனாகக் கருதக் கூடிய கருணை கூட வால்மீகத்திலே வேறொரு கட்டத்தில் காணப்படுகிறது. ராவண வதத்திற்குப் பின் விபீஷணனை நோக்கி ராமன், 'பகைவனுடைய மரணத்துடன் பகைமை தீர்ந்து போகிறது' என்று சொல்லிவிட்டு, 'நீ உன் சகோதரனுக்கு உரிய இறுதிக் கடனைச் செய்வாய்' என்கிறான். இதே கட்டத்தில் விபீஷணனுடைய சகோதரனைத் தானும் இப்போது சகோதர நிலையில் நோக்குவதாய்க் கூறுகிறான்.

இங்கே ராமனுக்கு விபீஷணன் மீதுள்ள விசேஷ கருணை தான் வற்புறுத்தப்படுகிறது என்பது என் கருத்து. மேலும் ராவண வதத்திற்குப் பின்புதானே இந்த நிகழ்ச்சி!

ராமன் என்ற லட்சியத்தை நமக்கு அளித்தவர் 'ஆதி கவி' என்றும், 'கவிகளுக்குள் கவி' என்றும் போற்றப்பெறும் வால்மீகி தான். அப்படியிருக்க, வேறு யாருமே இந்தக் குண சித்திரத்தை மேலும் நிறம் பெற, அழகு பெற வளர்த்துக் காட்ட முடியாது என்று வாதிப்பவர்கள் உண்டு.

'வால்மீகி-சித்திரத்திலே தான், என்ன அதிசய எளிமை! என்ன அபூர்வ வாழ்க்கை புன்மை!' என்று ஒரு முகமாய் ரசிகர்கள் ஒப்புக் கொள்ளும்போது, 'கம்பன் தான் இக் கலைத் திறனை அபிவிருத்தி செய்து காட்ட முடியுமா!' என்று சிலர் கருதுவதிலும் அதிசயம் இல்லை.

இப்படியெல்லாம் அறிஞர்கள் சொல்லக்கூடுமாயினும், 'கம்ப சித்திரம் வேறு, வால்மீகி சித்திரம் வேறு; இரண்டும் இருவகையான சிருஷ்டிகள்' என்பதையாவது இருவகைக் காவியங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும்.

வால்மீகி காலத்திற்குப் பின் பல நூற்றாண்டுகளாக மக்கள் உள்ளம் புகுந்து ராமன் வளர்ந்து வந்ததையும் கம்பனுடைய மேதை பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டுமல்லவா! கங்கையும் யமுனையும் கலப்பதுபோல் ஆரிய-திராவிட சிந்தனைகளும் கலையம்சங்களும் சங்கமித்துக் கம்பனுடைய சித்திரங்களுக்கு ஒரு புதிய சோபை தந்திருப்பதும் சாத்தியம் தானே!

எல்லாவற்றுக்கும் மேலாக, கம்பனுடைய மேதாவிலாசம் புத்தப் புதிய சிருஷ்டிகளைக் கலைத் துறையில் செய்து காட்ட வல்லது. எனவே, துணிந்து வால்மீகியின் பூர்ண சித்திரத்தையும் பரிபூர்ண சித்திரமாக்க முயன்றிருக்கிறது. இந்த முயற்சியில் வெற்றியும் பெற்றிருக்கிறது என்பது வ. வே. சு. ஐயர் முதலான விமர்சனக் கலைஞர்களின் தேர்ந்த அபிப்பிராயம்.

அமுதத்தின் சுவையை அதிகரிக்கச் செய்ய முடியுமா! வானவில்லை மேலும் வசீகரமாக்க வர்ணம் பூசுவதுண்டா! தீவட்டிகளாலும் மத்தாப்புகளாலும் சூரிய ஒளி அதிகமாகிவிடுமா! உண்மையை ஸாக்ஷாத்கரித்த வால்மீகியின் இதிகாச சித்திரங்களையும் மேலும் அழகு ஒளிர வளர்த்துக் காட்ட முடியாது என்ற கலைஞர்களின் தேர்ந்த அபிப்பிராயத்தையும் நாம் கவனித்துச் சீர் தூக்கிப் பார்க்க வேண்டியதுதான்.

இந்த அபிப்பிராயத்தையும் ஆராய்ந்த பின்பே திரு வ. வே. சு. ஐயர், கே. என். சிவராஜ பிள்ளை, வையாபுரிப்பிள்ளை முதலானவர்கள் கம்ப சித்திரங்களின் தனிப் பெருமாட்சியை வற்புறுத்துகிறார்கள்.

அவதார மூர்த்தியை மானுடப் பண்பில் சிறிதும் குறையாதவனாக்கி, 'இதோ பாருங்கள் மானுடத்தின் வெற்றியை!' என்று காட்டும் கவிச் சக்கரவர்த்தி, ராம குண சித்திரத்தையும் வால்மீகத்தில் நாம் காண்பதைக் காட்டிலும் சுவைபட, ஒளிபெற வசீகரமாக்கிக் காட்டுகிறான் என்பதைக் கம்பன் காவியத்தைக் கற்கும் முறை தெரிந்து கற்பவர்கள் எப்படி மறக்க முடியும்!



97. அரண்மனைக்குத் திரும்பிய அரக்கர்கோன்

(வால்மீகியின் கதைப் போக்கு)

'இன்று போய் நாளை உன் சேனையோடு ரதம் ஏறி வா; அப்போது அந்த ரதத்தில் இருந்தபடியே நீ என் வல்லமையைப் பார்க்கலாம்' என்று ராமன் சொன்னதும்,' ராவணன் அப்படியே கொழுப்பு ஒடுங்கி விட்டவனைப் போலக் காணப்பட்டான். மகிழ்ச்சியும் ஒழிந்தவனாகக் காணப்பட்டான்' என்று வால்மீகி கதையைத் தொடர்ந்து சொல்லுகிறார்.

வில் ஒடிந்து போயிற்று. குதிரைகளும் தேர்ப் பாகனும் மடிந்து போனார்கள். உடம்பும் பாணங்களால் பீடிக்கப்பட்டது. ஸர்வாதிகாரத்தின் அறிகுறியான கிரீடங்கள் உடைக்கப்பட்டன.

இந்த நான்கு குறிப்புக்களுடன் ராவணனுடைய அந்தப் பரிதாப நிலைமையை நமக்கு நினைவூட்டும் முனிவர் பெருமான், ராவணன் அதிவேகமாய் இலங்கைக்குள் பிரவேசித்தான் என்கிறார்.

மகிழ்ச்சி

அரக்கர்கோனாகிய ராவணனுடைய தோல்வி அசுரர்களுக்கும் களிப்பை உண்டாக்கியதாம். துஷ்ட அசுரர்களையும் இந்த அரக்கர்கோன் எவ்வளவோ கஷ்டப்படுத்தி யிருக்கிறான்.

தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் ஒருங்கே பயங்கரனாக இருந்தான் நிகரற்ற பலசாலியான ராவணன் என்று கூறும் வால்மீகி, இந்த ராவணன் தோல்வி, தேவேந்திரனை உள்ளிட்ட தேவர்களோடு அசுரர்கள், பூதகணங்கள், திக்பாலர்கள், முனிவர்கள், உரகர்கள், நீரிலும் நிலத்திலும் வசிக்கும் பிராணிகள் ஆகிய எல்லாருக்கும் களிப்பைத் தந்ததாம் என்கிறார்.

'இந்த மாபாவி, ராமனால் தோல்வியடைந்தான் இனி அவனுக்கு மரணகாலமும், நமக்குக் கஷ்டங்களெல்லாம் தீரும் காலமும் நெருங்கி விட்டன' என்று எல்லாரும் கவலை யற்றுக் களிப்புற்றனர். இப்படி உலகத்தாரின் உள்ளத்தைக் காட்டி, அந்தப் படுகளத்திலே ராமன் அப்போது செய்த காரியத்தையும் குறிப்பிடுகிறது வால்மீகம்.

ராமன், ராவண பாணங்களால் பீடிக்கப்பட்டிருந்த லட்சுமணனையும் கவனித்தான்: வானரங்களையும் கவனித்தான். அவர்கள் மேல் பாய்ந்திருந்த பாணங்களை உருவி எடுத்துக் காயங்களை ஆற்றச் செய்தான்.

இப்படி அவர்களைப் பீடையிலிருந்து நீக்கி அந்தச் சேனையை வேறு இடங்களுக்கு நடத்திக் கொண்டு போனான்.

ராவணன் மனக் குழப்பம்

இப்படி ராமன் முதலானவர்கள் ராவணன் தோல்வியால் எவ்வாறு பாதிக்கப்பட்டனர் என்பதைத் தெரிவித்த பிறகு, இலங்கைக்குள் புகுந்து கொண்டிருக்கும் ராவணனுடைய மனக் கலக்கத்தைத் தெரிவிக்கிறார் முனிவர் பெருமான்.

செருக்குக் குலைந்த ராவணன் ராம பாணத்தை நினைத்து அஞ்சிய வண்ணம் சென்றானாம். 'ராம பாணங்கள் மறுபடி வந்து மொய்க்கின்றனவோ!' என்ற அச்சத்தால் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனான் என்பது கருத்து.

ராவண வீரனையும் இவ்வாறு செய்து விட்டது மனக்குழப்பம் என்று தான் இங்கே சமாதானம் சொல்லக் கூடும்.

அப்போது அரக்கர் கோனுக்கு ஏற்பட்டிருந்த அவமானத்தைக் குறிக்க இரண்டு உவமைகள் உபயோகிக்கப் படுகின்றன. ஒன்று, சிங்கம் துரத்திய யானை; மற்றது கருடன் துரத்திய பாம்பு.

மத யானையின் கொழுப்பும் ஸர்ப்பத்தின் விஷத் தன்மையும் ராவணன் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தன என்பது குறிப்பு.

ராம பாணங்களை ராவணனுல் மறக்கவே முடியவில்லை. 'என்ன அதிசயம்! இப்படியும் பாணங்கள் உண்டோ! பிரமதண்டம் போல் ஜொலிக்கின்றன: மின்னல் போல் மின்னிக் கண் கூசச் செய்கின்றன!' என்று நினைத்துக் கொண்டே போனான். இந்த நினைப்பே துக்கமாகி அறிவுக் கண்ணைக் கூசச் செய்கிறது.

திவ்யமானதொரு தங்கச் சிங்காதனத்தில் வீற்றிருக்கிறான். முன்போல் 'ஜம்' மென்று கொலு வீற்றிருக்கிறான் என்று சொல்வது தவறு.

அரக்கர்களை நோக்கி இறுமாந்து பேசி அவர்களைக் குதூகலப்படுத்தும் அந்த ராவணன் யாரோ! அந்தப் பத்துத் தலையன் யாரோ! வாக்கு, அந்த ராவணுகாரத்தை இழந்து விடுகிறது.

'நான்' என்று தான் ஆரம்பிக்கிறான். ஆனல் அந்த 'நான்' இப்போது இங்கு இல்லை. 'நான் இது வரை எவ்வளவோ கஷ்டப்பட்டுச் செடதிருந்த தவங்களெல்லாம் வீணுகி விட்டன' என்று தானே பேசத் தொடங்குகிறான்.

தேவாசுரர்களையும் தேவேந்திரனையும் அலட்சியமாகத் துரத்தி யடித்தவன். ஒரு தடவையா! 'அத்தகைய வெற்றியுள்ள நான் அற்ப மானுடன் ஒருவனுல் வெல்லப் பட்டேனே; அவமானத்திற்கு உட்பட்டேனே' என்கிறான்.



முன்பு பிரமதேவன் ராவணனை நோக்கி ஒரு கோரமான வார்த்தை சொன்னுனும். அதாவது, மனிதர்களிடமிருந்து இவனுக்குப் பயம் உண்டாகும் என்றுனும். அந்த வார்த்தையை இதுவரை ராவணன் நினைத்துப் பார்த்தா இத்தனை காரியங்களைச் செய்திருக்கிறான்!

ஆனல் அந்த வார்த்தை ஏதோ ஒரு சாபம் போல் பலித்து விட்டதே என்கிறான் இப்போது. பிரமதேவனின் வார்த்தை தவறாது என்பதையும் ஒப்புக் கொள்கிறான்.

தான் வரம் வேண்டிப் பெற்ற அந்தக் காலம் நினைவிற்கு வருகிறது. தேவர், அசுரர், கந்தர்வர், யட்சர், அரக்கர் முதலியவர்களிட மிருந்து தனக்கு மரணம் நேரக் கூடாதென்று தான் வரம் பெற்றதன்றி, மனிதர்களை அலட்சியம் செய்து விட்டதால் அவர்களால் மரணம் நேராதிருக்கும்படி வரம் பெறவில்லையே என்று பெருமூச்சு விடுகிறான்.

திக்விஜய காலம் நினைவிற்கு வருகிறது. ராமனுடைய முன்னோர்களில் ஒருவனோடு சண்டை போட்டான் ராவணன்; ஜயித்து விட்டான். அந்த ஜயமும் இப்போது பயம் மூட்டுகிறது!

அந்த அரசன் மரண மடையும்போது ராவணனைப் பார்த்து, 'அரக்கப் பதரே! துர்ப்புத்தியே! உன்னை வம்ச நாசம் செய்யப் போகிறான் ஒருவன், போர்க்களத்திலே. அவன் என் வம்சத்தில் பிறக்கப் போகிறான். உன் பிள்ளைகளோடும் அமைச்சர்களுடனும் பரிவார சைனியங்களுடனும் உன்னை வதைக்கப் போகிறான் அந்த மகா வீரன்' என்று சொன்னுனும்.

அப்படி அவன் அந்த நாளில் சொன்னதையும் சாபமாகக் கொள்ளுகிறது இப்போது ராவணனுள்ளம். அந்தச் சாபம் தான் பலித்து, அதே குலத்தில் தோன்றிய இந்தத் தசரத புத்திரனைத் தனக்கு எதிரியாக அனுப்பி வைத்திருக்கிறதோ! கவலைப்படுகிறது ராவணனுடைய மனச்சாட்சி.

எவ்வளவு காலமாக அந்த மனச்சாட்சியையும் இந்தச் சர்வாதிகாரி அடக்கி ஆண்டு வந்திருக்கிறான்! ஏறக்குறையப் பேசாமடந்தையாக்கி வைத்திருந்த மனச்சாட்சி இப்போது பேசும் மடந்தையாகி, ஒரே அடியாகச் சள சளவென்று பேசிக் கொண்டேயிருக்கும் மடந்தையும் ஆகி விட்டது!

எவ்வளவோ காலத்திற்கு முன்பு— 'முன்னொரு காலத்தில்' என்று ராவணன் கருதக்கூடிய அவ்வளவு காலத்திற்கு முன்பு—நடந்த 'வேதவதி கதை'யையும் மனச்சாட்சி மனக் கண்முன் 'இப்போது தான் நடக்கிறதோ!' என்ற ரீதியில் நடத்திக் காட்டுகிறது.

'வலிமையே உரிமை' என்று தவருக நடந்து கொண்ட போது அவளும் ராவணனைச் சபித்திருக்கிருள். 'என்னால் உனக்கு மரணம் நேரப் போகிறது!' என்ருளே, அது என்ன கதை!

ராவணன் சற்றுத் திடுக்கிட்டுப் போகிருன்,—'அவளோ



இவள்!' என்பதாக. ஆனால் இவள் ஜனக குல சுந்தரியான சீதை தானே! அவளே தான் இந்தப் பெயர் பூண்டு வந்து விட்டாளோ!—என்று அஞ்சுகிறது நெஞ்சு.

இப்படி இதயம் அலட்டிக் கொண்டே போகிறது. மேலும், தவ வலிமையுள்ளவர்கள் ராவணனைக் குறித்து என்ன என்ன சொன்னார்களோ, அந்தப் பேச்செல்லாம்—உள்மனத்தில் எங்கெங்கேயோ, எப்படி எப்படியோ பொறிக்கப்பட்டிருந்ததெல்லாம்— அப்படியே ஓடி வருகிறது ராவணன் முன்பு.

'அந்த அப்ஸரஸ் — அந்த வருண புத்திரி சொன்னது பழுதாகுமா!' என்று தோன்றுகிறது ஒரு சமயம், 'ரம்பையின் துயரமும் பயமுறுத்துகிறதே' என்று அலறுகிறது இதயம் ஒரு கணம்.

மதோன்மத்தனாகத் திரிந்த அந்த நாளில் 'நந்தியை நிந்தித்தோமே, அந்தப் பாவம் தான் இப்படி விளைந்ததோ!' என்று கதறுகிறது இதயம். நந்தி சாபம் யாரைத் தான் சும்மா விடும்!

உமாதேவியின் சாப நினைவும் வருகிறது. வெள்ளியங்கிரியைப் பேர்க்கும் முயற்சியில் ராவணன் திடீரென்று ஈடுபட்டானல்லவா திக்விஜய காலத்திலே! அப்போது உமையம்மையும் திடீரென்று சற்றுப் பயந்து விட்டாளாம்.

கைலாஸபதியுடன் அம்மை ஏகாந்தமாய் உரையாடிக் கொண்டிருந்த சமயம். அந்தப் பெருமான்,

> பெண்பால் உகந்தான்
> பெரும்பித்தன் காணேடி!

என்பது மணிவாசகரின் அருள் வாசகமல்லவா!

அந்த ஏகாந்த சமயத்தில் அகாரணமாய் உலக அன்னையையும் சற்றுத் திடுக்கிடச் செய்த ராவணனை நோக்கி அந்த அம்மை, 'என்னைப் போன்ற ஒரு பெண்ணால் உனக்கு மரண பயம் நேரக்கடவது' என்று சாபம் கொடுத்தாளாம்.

ஸாமகானம் பண்ணி இறைவனிடம் அருளும் வாளும் பெற்று மீண்ட அந்த நிலையில் பார்வதி தேவியின் சாபமும் நிழல் போலத் தொடர்ந்திருக்க வேண்டுமே! அதை இப்போது நினைத்துப் பார்க்கிருன்.

குழப்பம் தெளியுமா?

இப்படி யெல்லாம் எண்ணிப் பார்க்கும் இதயம் திருந்தவும் கூடுமே. அது தான் இல்லை. அப்படித் திருந்திவிட்டால் ராவணன் ராவணனுயிருக்க முடியாதே!

'நெஞ்சமே! நீ திருந்தவேண்டும், நல் வழிக்குத் திரும்ப வேண்டும்' என்று ராவணன் நெஞ்சை நோக்கி உபதேசிக்க வில்லை.

அரக்கர்களை நோக்கி இப்படியெல்லாம் உரக்கச் சிந்தனை செய்து கொண்டிருப்பவன், கடைசியாக இந்தச் சிந்தனைகளையெல்லாம், கவலைகளையெல்லாம் உதறித் தள்ளி விடுகிறுன்.

'இந்த விஷயங்களை யெல்லாம் நன்ருக அறிந்து ஆலோசித்து எதிரிகளை ஐயிக்கும் உபாயங்களை மேற்கொள்ள வேண்டியது தான்' என்பதே ராவணன் துணிவு.

'அரக்கர்கள் எல்லாரும் இலங்கையின் உட்கோட்டை வாசல்களிலும் கோபுரங்களிலும், அந்தக் கோபுரங்களுக்குப் பக்கத்தில் போர் வீரர்கள் உலாவுவதற்காக ஏற்பட்டுள்ள இடங்களிலும் மொய்த்துக் கொண்டு இந்த நகரத்தைப் பாதுகாக்க வேண்டும்' என்று கட்டளையிடுகிறுன் ராவணன்.

இந்தப் பேச்சின் தொடக்கத்திலே பிரமதேவனுடைய சாபத்தை நினைத்துக் கொண்டு கொஞ்சம் கவலைப்பட்டானல்லவா! அதே பிரமதேவனுடைய சாபம்தான் கும்பகர்ணனையும் தூங்கச் செய்கிறது என்ற நினைவும் இப்போது வருகிறது.

அந்தக் கம்பீர உருவம் மனக் கண் முன் வந்து விடுகிறது. அவன் மட்டும் விழித்துக்கொண்டு போருக்குக் கிளம்பி விட்டால், எதிரிகள் ஓடிப்போய் விடுவார்கள் என்று தோன்றுகிறது

அரக்கர்களை நோக்கி ராவணன், 'அவனை எழுப்புங்கள். கவலையற்றுத் தூங்கிக் கொண்டிருக்கிறுன். நானே ஏக்கம் பிடித்துத் தூக்கம் இல்லாமல் தவிக்கிறேன்' என்கிறுன்.

இப்படிப் போய்க் கொண்டிருக்கிறது வால்மீகி கதை. எவ்வளவு தெளிவாக நம் மனக் கண் முன்பு நிகழ்ச்சி-விவரங்களைப் படிப்படியாகக் காட்டிக் கொண்டு வருகிருர்!

'உள்ளது உள்ளபடி' என்று சொல்லுகிருர்களே, அப்படிச் சரித்திரமாக நடந்ததை எழுதி விடவில்லை. அப்படித் தோன்றுமாறு கதை நடத்துகிருர் ரஸமாக. இது வால்மீகியின் ஒரு தனிக் கலைத் திறன் என்று வியக்கிறேம், பாராட்டுகிறேம்.

* * *

கம்பன் இந்தப் போக்கில் போக வில்லை. இந்தக் கம்ப சித்திரமும், ராவணன் கும்பகர்ணனை எழுப்பக் கட்டளையிடுவதோடு தான் முடிவு பெறப் போகிறது. எனினும் கம்பன் ஒரு தனிக் கலா சிருஷ்டியே செய்கிறுன் இந்தச் சந்தர்ப்பத்திலே.

கம்பனுடைய சிருஷ்டி கம்ப ராமாயணத்திலே வளர்ந்து வரும் ராவண குண சித்திரத்திற்குப் பொருத்தமானது. 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று ராமன் சொன்னதும் ராவணன் திக்பிரமை அடைந்து விட்டான் என்றே கருத வேண்டும்.

திக்கஜங்களையும் வலியப் போருக்கு இழுத்த அந்த மார்பையே பறிகொடுத்து விட்டது போலக் காணப்படுகிறுன் ராவணன். அந்த நெஞ்சு இருந்தால் அல்லவா அந்த நெஞ்சிலுள்ள மகிழ்ச்சியையோ கொழுப்பையோ இழந்தானென்று சொல்ல வேண்டும்!

ராவணனுடைய பரிதாப நிலையை வெளியிடும்போது ராவணன் அதிவேகமாய் இலங்கைக்குள் பிரவேசித்ததாகவும், ராம பாணங்களை எண்ணி எண்ணி அஞ்சிய வண்ணம் சென்றதாகவும் வால்மீகம் கூறுவதற்குக் கம்ப சித்திரத்தில் இடமில்லை.

வெள்ளியங்கிரியைக் குலுக்கிய தோள்களையும் இழந்துதான் போகிறுன். ஆனல் நிதானமாய் நடந்து போகிறுன்.

உள்ளத்தில் எவ்வித அச்சமும் இடம் பெறவில்லை. 'ராமபாணம் வந்து விழுந்து உயிரைக் கொண்டுபோனுல் போகட்டுமே. உயிரைக் காட்டிலும் மானம் தானே பெரிது!' என்பது இந்த ராவணனது இப்போதுள்ள மனநிலை.

இந்த நிலையில் மனக் குழப்பத்திற்கும் இடமில்லை. வீரத்தையும் களத்திலே போட்டுச் சென்றவனுடைய உள்ளத்தில் குழப்பம் ஏது, தெளிவு ஏது!

பழைய திக்விஜய நினைவுகள் பூசலிட்டு அதைரியப்படுத்துவதையும் நாம் கம்ப சித்திரத்திலே காணப் போவதில்லை. ஓய்ந்து கிடந்த மனச்சாட்சி அணையும் விளக்கைப் போலச் சுடர் வீசிய அதிசயத்தை வால்மீகி காட்டுகிருரே, அதையும் நாம் இங்கே காணப் போவதில்லை.

இந்தச் சித்திரத்தை அடுத்த வாரம் சேர்ந்து பார்க்கலாம்.



98. வீரம் அஸ்தமித்ததா?

கம்பன் சொல்லும் கதை

சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருக்கிறான். 'நாளை வா' என்று ராமன் கூறி முடித்ததும் அந்தப் படுகளத்தை விட்டு மீண்டவன்தான்.

தலையிலே கிரீடம் இல்லை; கையிலே வில்லும் இல்லை, வாளும் இல்லை. ஏறி வரத் தேரும் இல்லை. பரிவாரம் இல்லை; பணியாளர் இல்லை.

இயற்கையாக, உயிர்க் கொடியின் ஆணி வேராய்க் கிடக்கும் உயிராசையென்ற தற்காப்பு-உணர்வுதான் ராவணனை இப்படி மீளச் செய்ததா! இல்லை; சீதைமீது ஆசைதானே இப்போது ராவணனுக்கு உயிராசை!

இப்படிப் போர்க்களம் விட்டு வந்தவனை நடுவழியில் உற்றார் உறவினர் சந்திக்கிறார்கள். முதற் போரில் கலந்துகொள்ளாத படை வீரர்களும் தலைவர்களும் வந்து பார்க்கிறார்கள். ஆனால் இவன் அவர்களை வழக்கம்போல் நிமிர்ந்து பார்க்கிறானா, என்ன!

ஆண்களோடு பெண்களும் மனமுவந்து வரவேற்க வந்திருக்கிறார்கள். அவர்களைத்தான் கண்ணெடுத்துப் பார்க்க முடிகிறதா, ராவணன் இருக்கும் இந்த நிலையிலே!

ஊருக்குள்ளே — அகநகருக்குள்ளும் — வந்து, அரண்மனைக்குள்ளும் புகுந்துவிடுகிறான். அரண்மனை வாசலிலும் உற்றார் உறவினர், மனைவி மக்கள் கூடியிருக்கிறார்கள் ஒரு புறம். ஒரு புறம் மந்திரி, தந்திரிகள் 'தங்களைச் சக்கரவர்த்தி கலந்து ஆலோசிக்கக் கூடுமே' என்று வந்து காத்திருக்கிறார்கள். ராவணனோ பளிச்சென்று அரண்மனைக்குள்ளே போய் விடுகிறான்.

ஒரு பொற்பீடத்தில் இருந்துகொண்டு, தூதர்களை வரவழைக்கிறான்; எங்கும் உள்ள ராட்சஸப் படைகளையெல்லாம் திரட்டிக்கொண்டு வருமாறு கட்டளையிடுகிறான். தூதர்கள் போனபின், ராவணன் படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டு பெருமூச்சு விடுகிறான்.

அப்போது பாட்டனாகிய மாலியவான் வருகிறான். பேரன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு மெல்ல யோக க்ஷேமம் விசாரிக்கிறான். பேரனோ ராம பராக்கிரமத்தை ஒரே அடியாகப் புகழத் தொடங்கி விடுகிறான்.

அதுதான் சமயமென்று மாலியவான் ராவணனுக்குப் புத்தி சொல்லத் தொடங்கவே, மகோதரன் ஓடிவந்து ராவணனை உத்ஸாகப்படுத்துகிறான்.

'தம்பி கும்பகர்ணன் இருக்கும்போது உனக்கும் உண்டோ குறை!' என்று மகோதரன் கூறியதும், ராவணன் குதூகலம் அடைந்து, கும்பகர்ணனை எழுப்பி வருமாறு கிங்கரர்களுக்குக் கட்டளையிடுகிறான். இது இந்தக் கட்டத்திலே கம்பன் சொல்லும் கதை.

இந்தக் கதைப் போக்கும் ரஸமாயிருக்கிறதல்லவா! ஆனால் கதையைக் கவிதை எப்படிச் சொல்லுகிறது என்றல்லவா பார்க்க வேண்டும்!

மீண்டு வரும் காட்சி

ராவணன் போர்க்களம் விட்டு நகர் நோக்கி மீண்டு வரும்போது, எப்படியிருக்கிறான்!—எப்படித் தோற்றம் அளிக்கிறான்!

முடி இழந்து வாளும் இழந்து வெறுந்தலையும் வெறுங் கையுமாக வரும் புறத்தோற்றத்தைச் சானா காட்டுகிறான் கவி! அகத்தோடு புறத்தையும் 'இதோ பாருங்கள்' என்று காட்டுகிறான்.

தன் நிலைமை குன்றி அரக்கன் வந்து கொண்டிருக்கும் அந்த வருகையின் முதலாவது படம் இது :

வாரணம் பொருத
மார்பும், வரையினை
எடுத்த தோளும்,

நாரத முனிவற்(கு)
ஏற்ப நயம்பட
உரைத்த நாவும்,

தாரணி மவுலி
பத்தும், சங்கரன்
கொடுத்த வாளும்,

வீரமும் களத்தே
போக்கி, வெறுங்கையோ(டு)
இலங்கை புக்கான்

[வாரணம் – யானை ; திக்கஜங்கள், பொருத – போர் செய்த. வரையினை – மலையை ; கைலாஸ மலையை. தார் அணி – மாலை அணிந்த. மவுலி–கிரீடங்கள்.]

கிரீடத்தையும் வாளையும் போர்க் களத்திலே போட்டு விட்டது போல், மார்பையும் தோளையும் நாவையும் போட்டு விட்டானும். மார்பு தோள் நாக்கு எல்லாம் முன் போலவே தான் காணப்படுகின்றன ; ஆனல் என்ன மாறுதல் உள்ள படியே !

ராவணன் இலங்கையில் புகும் போது சூரியாஸ்தமன சமயம். தன்னுடைய வீர சூரியனும் அஸ்தமித்துக் கொண்டு தான் இருக்கிறன !

நகரமா, நரகமா ?

இந்த அவ நம்பிக்கையின் புறத்தோற்றம் பின் வருமாறு வருணிக்கப் படுகிறது :

கிடந்த போர்
வலியார்
மாடே கெடா
தவா –
னவரை எல்லாம்

கடந்துபோய்,
உலகம்
மூன்றும் காக்
கின்ற
காவ லாளன்

தொடர்ந்துபோம் பழியி–
னேடும், தூக்கிய
கரங்க ளோடும்

நடந்துபோய் நகரம்
புக்கான் ; அருக்கனும்
நாகம் சேர்ந்தான்.

[கிடந்த–பொருந்திய. போர் வலியார் மாடே – போர் செய்யும் வலிமையுள்ளவர்களிடத்து. கெடாத – தோற்காத. நாகம் – மலை.]

இப்போது ராவணனைத் தொடர்ந்து வருபவர் இல்லை. ஏவலாளர் கைவிட்டது போல் காவலாளனை ஆயுதங்களும் ஊர்திகளும் கைவிட்டனவாம். கால் நடையாகத்தான் வருகிறனும்.

தொடர்ந்துபோம் பழியி –
னேடும், தூக்கிய
கரங்க ளோடும்

நடந்துபோய் நகரம்
புக்கான்

என்பதில், இந்தத் தலைநகரத்திலிருந்து உலகம் மூன்றையும் காக்கின்ற காவலாளனின் பரிதாப நிலை எவ்வளவு தெளிவாய்ப் பளிங்கில் வைத்துப் பார்ப்பது போலப் புலனுகி விடுகிறது !

'இந்தப் பாட்டின் இறுதியில் வரும் 'சூரியனும் அஸ்தமித்தான்' என்ற செய்தி ராவணேச்வரன் நகர் புகும் பரிதாபக் காட்சியைப் பூர்த்தி செய்கிறது.




சூரிய நாராயணன், சிவ சூரியன், சூரிய சுப்பிரமணியன் என்றெல்லாம் சமய உலகில் சொல்வது போல், ராவண சூரியனும் வீர உலகில் பிரசித்தமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். ஆனால், இந்தச் சூரியாஸ்தமனத்தோடு இந்த வீர சூரியனும் அஸ்தமிக்கிறதா!

இவன் நகரம் புகுந்ததும் வெற்றிமாலை போட வந்திருக்கிறார்களே, அது என்ன கூத்து! பின்னிப் பூச்சூடித் தங்களை அலங்கரித்துக்கொண்டு மாலையும் கையுமாக வந்திருக்கிறார்களாம், இலங்கை — அழகிகள்.

எத்தனையோ போர்களுக்குப் போய் மீண்டிருக்கிறான் ராவணன், இதற்கு முன்பு. இப்படித் தான் அழகு வந்து காத்திருக்கும் வீரத்திற்கு மாலை போட! 'வெற்றி வீரன் வருவான், பூமாலை புனைவோம், பூமாரி பொழிவோம்' என்ற ஆசை, ராஜபக்தி.

புதல்வர்கள் முதலான பந்து மித்திர சம்பத்துக்களும் குறைவின்றி வந்து கூடியிருக்கின்றன, அன்பைத் தெரிவிக்கவும், ஆற்றலைப் போற்றவும். இவனுடைய வெற்றிக்குப் பங்காளிகளல்லவா!

இப்போது சேனையும் திரண்டு வந்து கடல் போல் கோஷிக்கிறதாம். ராம பாணத்திற்கு இரையானவர்கள் போக எஞ்சியவர்கள். சேமப் படைகளாகக் கோட்டைக்குள் வைக்கப்பட்டிருந்தவர்களோடு சங்கமித்து விட்டால் அது ஒரு கடல்தானே!

எனினும் இந்தக் கடல் ராவணன் கண்ணில் படவே யில்லையாம். எதிர் கொள்ள வந்திருக்கும் பந்துமித்திரர்களும் கண்ணில்பட வில்லை. மலரும் மாலைகளுமாய் வந்து நிற்கும் சுந்தரிகளாவது கண்ணில் படுகிறார்களா! என்ன மாயம் இது!

லங்கா நகரத்தின் வளமும் வனப்பும் தான் முன்போல் கண்ணில் படுகின்றனவா! லங்கா சுந்தரி எப்படி ஜொலிக்கிறாள் அந்த மாலை வேளையின் மத்தாப்பு—வெளிச்சத்திலே! அந்தி மாலை இன்றும் இந்த லங்கா மோகினியை அணி செய்து வெறி கொண்டிருக்கிறது. ஆம்; அந்தி மாலையின் ஆபரண சாலையில் தான் என்ன குறை!

வழியிலே,
விழியிலே!

இப்போதுள்ள ராவணனது நிலையை அந்தி தந்த ஒரு மோகன சித்திரம் போல் காட்டுகிறது பாட்டு:



மாதிரம் எவையும்
நோக்கான், வளநகர்
நோக்கான், வந்த

காதலர் தம்மை
நோக்கான், கடற்பெருஞ்
சேனை நோக்கான்;

தாதவிழ் கூந்தல்
மாதர் தனித்தனி
நோக்க, தான்ஓர்

பூதலம் என்னும்
நங்கை தன்னையே
நோக்கிப் புக்கான்.

[மாதிரம் – திக்கு. காதலர் – புதல்வர். சுற்றத்தார்; அன்புள்ளவர்கள். தாது அவிழ் – பூக்கள் முறுக்கு விரிகின்ற.]

மாதர் காதலர் முதலானவர்கள் இப்படி அலங்காரமாக வரவேற்க வந்து நிற்பார்களே யென்பதை, வீரமும் களத்தே போட்டு வந்தவன், எண்ணிப் பார்க்கவில்லை இந்த அலங்கோல நிலையில். அவர்களுக்குத் தான் தெரியுமா, தங்கள் வீர மன்னன் இப்படித் தலையைத் தொங்க விட்டு நிலம் பார்த்த வண்ணம் வந்து சேர்வான் என்பது!

தப்பித் தவறிக் கண்கள் சற்று நிமிர்ந்தால் என்ன ஆபத்து! வாள் வந்து அறுக்கிறதாம் உள்ளத்தைக் கூட. மாலையும் கையுமாக வந்து நிற்கிறார்களே, அந்தப் பெண்களின் கண்களே தான் அரக்கர் கோனின் கண்களைச் சந்தித்ததும் இந்தப் பாடுபடுத்துகின்றன!

முகங்களின் அழகிலோ, அந்தக் கண்களின் கவர்ச்சியிலோ மாறுபாடு ஒன்றும் இல்லை. அவர்கள் இப்போது பார்ப்பது அன்புப் பார்வைதான், ராஜ பக்திப் பார்வைதான். என்றாலும் அந்தக் கண்கள், வாள்கள்போல் அறுக்கின்றனவாம். படுகளம் படுத்திய பாடு இன்னம் விட்ட பாடில்லையோ!

நிமிரப் பாராது குனிந்து வந்து கொண்டிருந்தால்தான் ஆபத்திலிருந்து தப்ப முடிகிறதா இப்போது! வார்த்தை காதில் விழுகிறதே—வரவேற்க வந்த ஆண் பிள்ளைகளின் வார்த்தை. வார்த்தைகளா அவை!

இராகவன் வாளி
ஒத்த!

[வாளி–அம்பு. ஒத்த–ஒத்தன.]

அப்படி அவர்கள் ஒன்றும் செவி சுடும் சொல்லைச் சொல்லவில்லை. அனுதாபப் பேச்சு, அபிமானப் பேச்சு. 'என்ன குடி முழுகிப்போய் விட்டது! பழிக்குப் பழி வாங்கி விடலாம்; ஊதித் தள்ளி விடலாம் எதிரிகளை!' என்பது போலத் தான் அந்த ஆண் பிள்ளைகள் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டிருக்க வேண்டும்.

கண் மலர் வாளாகி வதைக்க, ராம பாணமாகித் துளைக்கிறதாம் சொல்–மலர். இது களம் நீங்கி வளநகர் நோக்கி வந்து கொண்டிருக்கும் அரக்கர் கோனின் நிலை.

நாளொத்த நளினம்
அன்ன முகத்தியர்
நயனம் எல்லாம்

வாளொத்த; மைந்தர்
வார்த்தை இராகவன்
வாளி ஒத்த!

—இரண்டு அடிகளில் மனோ தத்துவ உலகை அளந்து காட்டும் அதிசயம்.

கவிதையுலகின் மகா வாக்கியங்களில் ஒன்று. ரஸித்து ரஸித்துப் பாடிப் பாடி உட்செவியிலும் இதய வீணையிலும் முரன்று கொண்டிருக்குமாறு அனுபவிக்க வேண்டும்.

அரண்மனை வாசலிலும் ஆபத்து

ராவணன் அரண்மனைக்குப் பக்கத்தில் வந்து விட்டான்; அரண்மனைக்கே வந்து விடுகிறான்; முகப்பிலும் முற்றத்திலும் ஒரு சிறு கூட்டம்.

இவர்கள் யார்! ஏன் இப்படி எந்திரப் பதுமைகள்போல் நிற்கிறார்கள்!

மந்திரச் சுற்றத்
தாரும், வாணுதற்
சுற்றத் தாரும்,

தந்திரச் சுற்றத்
தாரும், தன்கிளைச்
சுற்றத் தாரும்,

எந்திரப் பொறியின்
நிற்ப, யாவரும்
இன்றித் தான்ஓர்

சிந்துரக் களிறு
கூடம் சேர்ந்தெனக்
கோயில் சேர்ந்தான்.

[மந்திரச் சுற்றத்தார்–மந்திராலோசனைக்குத் துணையானவர்கள். வாள்நுதல் சுற்றத்தார்–ஒளி பொருந்திய நெற்றியை யுடைய மனைவியர் முதலானவர்கள். கிளைச் சுற்றத்தார்–உறவு முறையார்கள். எந்திரப் பொறியின் – (இங்கே) எந்திரத்தின் சக்தியால் இயங்கும் பிரதிமைபோல. சிந்துரக் களிறு — சிந்துரப்பொடி அப்பிய யானை. கோயில்–அரண்மனை.]

சிந்துரப்பொடி அப்பிய யானைபோல் இரத்தம் வழிய வருகிற அரக்கர்கோன் அரண்மனை புகுந்த காட்சி இது.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

99. என்ன நினைப்பாளோ ?

ஓரே சோர்வு உள்ளும் புறமுமாகப் பரவி விட்டது. பேச வாய் எழவில்லை. 'எந்தப் போர்க் கருவியை எப்படித் தாங்க முடியும்!' என்ற அளவிற்குச் சோர்ந்து விட்டன கைகள்.

சோர்விலும் நினைவாற்றல்

கிரீடச் சுமை இறங்கியதும் அலுப்பும் சலிப்பும் அதிகரித்தன. அந்தப் பழைய வீரத் தோளும் வீர மார்பும் கூடச் சுமையாகத் தானே இருந்திருக்கும் இப்போது!

இவ்வளவு அலுப்பிலும் சலிப்பிலும் கால்கள் எப்படியோ கொண்டு வந்து சேர்த்து விட்டன ராவணனை அரண்மனைக்குள்ளே. இனி இந்தக் களைப்பை எப்படித்தான் தாங்க முடியும்! படுக்கையில் போய் விழுந்து விட வேண்டியது தான்.

பளிச்சென்று அப்படிச் செய்து விடவில்லை அரக்கர்கோன். அருகே கிடந்த ஒரு செம்பொற் பீடத்தில் அமர்ந்து வருத்தத்தைக் கொஞ்சம் தணித்துக் கொள்கிறான்.

சட்டைக்காரன் ஒருவன் பக்கத்திலே நின்று கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்து ராவணன், 'நம்முடைய தூதர்களை இங்கே அழைத்து வா, விரைவில்' என்கிறான். அவன் ஓடிப் போய் அழைத்து வருகிறான்.

இது என்ன, இவ்வளவு சோர்வுக்கிடையே ஒரு காட்சி!

நீண்(டு)உயர் நினைப்ப
னாகி

என்பது, இந்த நிலையில் ராவணனை நாம் அறிந்து கொள்வதற்குக் கவிஞன் உதவும் ஒரு திறவுகோல்.

'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்ற அந்த வார்த்தை ராமபாணத்தைக் காட்டிலும் ஹிம்ஸிக்கக் களத்தை விட்டு வந்தவன், — சீதை என்ற உயிராசை தவிர வேறு ஆசைகளை யெல்லாம் ஆயுதங்களுடனும் மணி முடிகளுடனும் உதிர்த்துவிட்டு வந்து சேர்ந்தவன் — 'திக்பிரமை' கொண்டு நடந்து வந்தான்.

யாரோ தொடர்ந்துவருவது போல் ஒரு பிரமை. பழிதான். வேறு யார் அப்படி அனுமதியில்லாமல் தொடர்ந்து வரமுடியும்!

பின்னே பார்க்கவில்லை; முன்னும் பார்க்கவில்லை; எந்தத் திசையையும் பார்க்காமலே முடியிழந்த தலை கவிழ்ந்து எந்திரப் பதுமைபோல் வந்து கொண்டிருந்தவன் எதிர்ப்பட்டவர்களைப் பார்த்தாலும், எந்திரப் பதுமைகளைப் பார்ப்பது போன்ற உணர்ச்சியைத்தானே அடைந்திருக்கக்கூடுமென்று நினைக்கிறீர்களல்லவா!

அதுதான் இல்லை. கால்வீசி நடந்த செயல், திக்பிரமை – நிலையை ஒருவாறு குலைக்க, உணர்ச்சி மழுங்கிப் போகாமல் தீவிரமாயிற்று. அதனால் தான் கண்கள் வாளாயின; சொற்கள் சுடு சரமாயின, ராம பாணங்களும் ஆகிவிட்டன.

தன்னுடைய நிலை கண்டு நடுக்கிட்டு அசைவற்றுப் பேச்சற்று நின்றவர்களைப் பார்த்ததும், மழுங்கி யிருந்த நினைவாற்றல், கூராக்கிய கத்திபோல் ஜொலிக்கத் தொடங்கி விட்டது. நினைப்பு நீண்டு சென்றது; உயர்ந்து சென்றது.



உயர் நெறியில் அல்ல : 'நெடுந் தரும நெறி'யில் அல்ல. 'தவறான வழியே நெடுவழி' என்று சொல்வதுண்டு; இந்த நெடு வழியில் தான்!

எட்டி நினைக்கிறான் ராவணன்; நினைப்பை நெடுந்தூரம் வீசிப் பார்க்கிறான். சித்தம் என்ற விண்ணிலே நினைவை உயரப் பறக்கவிட்டுப் பார்க்கிறான்.

ஒரு முக்கியமான முடிவுக்கு வந்து விடுகிறான். ராட்சஸ ஏகாதிபத்தியத்தின் மூல பலம் முழுவதையும் திரட்டித் தான் ஆக வேண்டும். முதற் போர் கற்பிக்கும் பாடம் இது.

இந்த 'நீண்டுயர் நினைப்பு' சோர்ந்து போன தசைகளைக் கொஞ்ச நேரம் உருக்கைப் போல் ஆக்கிவிடுகின்றன—கொஞ்ச நேரம் தான் நரம்புகளும் மூளையும் ஒரு புதிய பலம் பெறுகின்றன. இந்த நீண்டுயர் நினைப்பில் சற்றுப் புதைந்து கிடக்கிறது வருத்தம்.

செம்பொற் பீடத்தில் அமர்ந்து, அயல் நின்ற சட்டைக்காரனை ராவணன் நோக்குவதும், கட்டளையிடுவதும், அவன் ஓடிப் போவதும், தூதர்களைக் கண்டு பிடித்துச் செய்தி சொல்வதும், அவர்களை அவசர அவசரமாய் அழைத்துக்கொண்டு திரும்பி வருவதும் 'எல்லாம் ஒரே மின்னல்-வேகத்தில் நடப்பது போலக் காண்பிக்கப்படுகின்றன இந்தப் பாட்டிலே:

ஆண்(டு)ஒரு செம்பொற்
பீடத்(து) இருந்து,நன்
வருத்தம் ஆறி,
நீண்(டு)உயர் நினைப்ப -
னூறி, கஞ்சுகி
அயல்நின் றானை



'ஈண்டுநம் தூதர்
தம்மை இவ்வழித்
தருதி' என்றான்;

பூண்டதோர் பணியின்
வல்லை அனையரைக்
கொண்டு புக்கான்.

[ஆண்டு – அங்கே. கஞ்சுகி – சட்டையிட்டு நிற்கும் மெய்காப்பாளன். ஈண்டு – இப்பொழுது. இவ்வழி – இங்கே. தருதி – தருவாய். பூண்டதோர் பணியின் – மேற்கொண்ட அந்தக் கட்டளைபிறகே. வல்லை – விரைவில். அனையரை — அப்படிப்பட்ட தூதர்களை. கொண்டு புக்கான் – அழைத்துக்கொண்டு புகுந்தான்.]

ஒரு பெருந் தூதர் கூட்டம் வந்து சேர்ந்து விடுகிறது நால்வர் தலைமையில். இந்தத் தூதர் – படைத் தலைவர்களுக்குப் பெயர்ப் பொருத்தமே அதிசயமாக அமைந்து விடுகிறது.

ஒருவன் காற்றிலே பறந்துபோகும் ஒரு கரிய பெரிய மேகம் போல் போய்த் திரும்புவானும். ஒருவன், மேகத்தை அப்படிச் செலுத்தும் காற்றைப் போல் எங்கும் கடுகி முடுகிப் போய் வருவானும். 'வாயு வேகன்' என்றே ஒருவனுக்குப் பெயர்.

மனத்தின் வேகத்தில் காரியத்தை முடித்துக் கொண்டு வருகிறவனை 'மனகதி' என்ற சிறப்புப் பெயராலேயே அழைக்கிறார்களாம்.

இப்படி வந்து நிற்கும் தலைவர்களின் தூதர் – படையை ஏவுகிறான் அரக்கர் கோன்:

மனகதி, வாயு
வேகன், மருத்தன், மா–
மேகன் என்(று) இவ்


வினையறி தொழிலர்
மூன்று ஆயிரர்
விரவினாரை,

'நினைவதன் முன்னம்
நீர்போய் நெடுந்திசை
எட்டும் நீந்திக்

கனைகழல் அரக்கர்
தானை கொணருதிர்
கடிதின்' என்றான்.

[வினை அறி தொழிலர் – தொழிலை ஒழுங்காகச் செய்யத் தெரிந்தவர்கள். மூன்று – முதலாக. ஆயிரர் விரவினாரை – ஆயிரக் கணக்காக வந்து சேர்ந்த தூதர்களை நோக்கி. கனை கழல் – ஒலிக்கின்ற வீரக் கழல். தானை – சேனை. கொணருதிர் – கொண்டு வாருங்கள். கடிதின்—விரைவில்.]

இந்தக் கட்டளையை ராவணன் மேலும் தெளிவு படுத்துகிறான். எட்டுத் திசைகளிலும் உள்ள அரக்கர்கள் தீவுகளிலும் மலைகளிலும் பாதாளத்திலும் இருப்பார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டு, அவர்களை



யெல்லாம் தாமதம் இன்றி அழைத்து வர வேணும் என்கிறான்.

இப்படி ராவணன் கட்டளை யிடுவதை யும், அந்தத் தூதர்—படை 'பணியைத் தட்டாது நிறை வேற்றுவோம்' என்று பணிவுடன் ஏற்றுக் கொள்வதையும் தெளிவாகக் கேட்கிறோம்:

'ஏழ்பெருங் கடலும்
சூழ்ந்த ஏழ்பெருந்
தீவும், எண்ணில்

பாழியம் பொருப்பும்,
கீழ்பால் அடுத்தபா -
தாளத் துள்ளும்,

ஆழியங் கிரியின்
மேலும், அரக்கரா -
னவரை யெல்லாம்

தாழ்விலிர் கொணர்திர்'
என்றான்; அவர்அது
தலைமேற் கொண்டார்.

[கடலும் சூழ்ந்த ஏழ் பெருந்தீவும்—கடல்கள் சூழ்ந்துள்ள ஏழு பெரிய தீவு களிலும். எண்ணில்—எண்ணில்லாத. பாழி—வலிமை. அம் பொருப்பும்—அழ கிய மலைகளிலும். கீழ்பால் அடுத்த—கீழ்ப்புறத்தில் இருக்கும். ஆழியங்கிரியின் மேலும்—சிறப்பாகச் சக்கரவாள மலை மீதும் உள்ள. தாழ்விலிர்—தாமதியாத வராய். அது தலைமேற் கொண்டார்—அந்தக்கட்டளையைத் தூதர்கள் தலைமேற் கொண்டனர்; அதைத் தட்டாது செய் வோம் என்று பொருள்பட வணக்கம் செலுத்தி விடைகொண்டனர்.]

மறுபடியும் சோர்வு—பெரு மூச்சு

தூதர்-படை விடை கொண்டதும், ஆறியிருந்த வருத்தம் மீறிப் பொங்கு கிறது. ராவணனால் தாங்க முடியவில்லை. அந்தச் செம்பொற் பீடத்தில் வீற்றிருக்க வும் இப்போது ஆற்றல் இல்லை.

கூர்மையான வேல் வந்து தொளைக்க அதைப் பொறுக்க முடியாமல் யானை அப்படியே சோர்ந்து படுத்துவிடுவது போல், திரு பூம்படுக்கையில் போய்ச் சாய்ந்து விடுகிறான் ராவணன். இந்த நிலையிலும் உலகமெல்லாம் நடுங்கிக் கொண்டிருக்கிறதாம்.

'இப்படி வருந்தித் துடிக்கிறானே, இந்த வெறியில் நம்மை என்ன செய்து விடுவானோ!' என்று உலகம் வருந்தித் துடிக்கிறதாம். வேலால் குத்தப்பட்டுச் சாய்ந்த யானை புரண்டாலும் பக்கத் திலுள்ளவர்கள் நசுங்கிப் போகக் கூடுமே!

உலகம் பதைத்து விம்ம, ராவணனும் பதைத்து விம்முகிறான்; பெருமூச்சு விடுகிறான்:

பண்நிறை பவளச்
செவ்வாய்ப் பைந்தொடிச்
சீதை என்னும்

பெண்நிறை கொண்ட
நெஞ்சில், நாண்நிறை
கொண்ட பின்னர்,

கண்இறை கோடல்
செய்யான், கையறு
கவலை சுற்ற

உள்நிறை மானம்
தன்னை உமிழ்ந்(து), எரி
உயிர்ப்ப தானான்.

[பண் நிறை—பண் அல்லது இன்னிசை நிறைந்த. பைந்தொடி-பசும் பொன்னால் செய்த வளைகள். நிறை கொண்ட—நிறைந்திருந்த. நாண்—நாணம். கண் இறை கோடல் செய்யான் — கண் சிறிதும் உறங்காதவனாகி. கையறு கவலை—செயலற்றுப் போகுமாறு தன் னைச் செய்துவிட்ட கவலை. உள் நிறை—உள்ளே நிறைந்திருந்த. எரி உயிர்ப்பதா னான்—நெருப்புப் போல் பெருமூச்சு விட லானான்.]

சீதை நிறைந்திருந்த நெஞ்சில் நாணம் நிறைந்து அந்தச் சீதைக்கும் இடமில்லா மல் செய்துவிட்டது போலக் காண்கிற தல்லவா! உண்மையில், இப்போது இந்த நாணமும் சீதை காரணமாகவே கவலைப்படுத்துவதுதான்.

வீரமும் களத்தே போட்டவன் சீதை மீது கொண்டிருந்த ஆசையை மாத்திரம் போட்டு விடாமலே தான் திரும்பி விட் டான்.

முடிகளைப் பறிகொடுத்த தலை கொஞ்ச மும் ஆசையை இழந்துவிடவில்லை.

முற்ற ஒதிஎன்?
மூர்க்கன் முடித்தலை
அற்ற போதன்றி
ஆசை அறான்

என்று அங்கதன் சொன்னது எவ்வளவு உண்மையானது!



100. பேரனும் பாட்டனும்

ராவணனுக்கு எத்தனையோ பகைவர்கள். மண்ணெல்லாம் பகை; விண்ணும் பகைதானே. 'மன்னுயிர் புடைத்துத் தின்'று மகாராஜ்யம் ஸ்தாபித்தவனை உலகம் பூஜிப்பது பயத்தால் தானே!

சீதை சிரிப்பாளே!

பகையை ராட்சஸ பலம் அடக்கி ஒடுக்கி விட்டது—புறப் பகையைத்தான். பகைவர்களும் போராடிப் பார்த்திருப்பார்களே; அந்தப் போராட்டங்களெல்லாம் ராவணன் திக்விஜயம் செய்த காலத்திலேயே பெரும்பாலும் நடந்து முடிந்து விட்டன. ஒரு வெற்றி, இரண்டாவது வெற்றி, மூன்றாவது வெற்றி, மேலும் மேலும் வெற்றிகள்: எங்கும் ஒரே ராட்சஸ பயம்.

ராவணன் முகம் கண்டதுமே முதுகு காட்டினர். ஆயுதத்தைப் பிரயோகிக்க வேண்டிய அவசியமே இல்லாமல் போய் விட்டது. அந்த வேடிக்கை கண்டு ராவணனுக்குச் சிரிப்பு வந்து விடும்.

தனக்கு எதிர் முகம் காட்டாமலே 'செத்தேனா, பிழைத்தேனா!' என்ற உணர்ச்சியின்றி ஓடி உயிர் தப்ப முயலும் அந்த வேகம் எப்படி வந்து விட்டது அந்த இருகால்—பிராணிகளுக்கு! இது ராவணனுடைய சிந்தனையைத் தூண்டவில்லை; சிரிப்பைத் தூண்டியது, இரங்கச் செய்யவில்லை; 'இடி இடி'யென்று சிரிக்கச் செய்தது.

உதட்டுச் சிரிப்பல்ல, முகத்துச் சிரிப்பல்ல; தோள் குலுங்கச் சிரித்த மூர்க்கச் சிரிப்பு. சிரிக்கப்பட்டவர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள், விண்ணிலும் இருக்கிறார்கள்; மண்ணிலும் இருக்கிறார்கள்.

எதிர்ச் சிரிப்புச் சிரிக்கச் சித்தமாகத் தானே இருப்பார்கள் என்பது ராவணன் எண்ணம்.

அவர்களுக்கும் ஒரு காலம் வந்திருக்கிறதல்லவா இப்போது!—'ஆனைக்கு ஒரு காலம், பூனைக்கு ஒரு காலம்' என்பது போல. ஆனால் அவர்களுடைய சிரிப்பைக் குறித்து ராவணனுக்குக் கவலையில்லை. 'அது குறித்து நான் வெட்கமடையவில்லை!' என்கிறானே. ஏன்?

ராவணன் உள்ளத்திற்குள்ளே நடக்கும் நிகழ்ச்சி இது:

'வான் நகும்; மண்ணும்
  எல்லாம் நகும்; நெடு
  வயிரத் தோளால்

நான் நகு பகைஞர்
  எல்லாம் நகுவர்' என்(று)
  அதற்கு நாணேன்,

வேல் நகு நெடுங்கண்—
  செவ்வாய் மெல்லியல்
  மிதிலை வந்த

சானகி நகுவள்'
  என்றே நாணத்தால்
  சாம்புகின்றான்.

[வான்—(இங்கே) வானுலகம்; தேவர் உலகம். மண்—(இங்கே) மண்ணுலகம்; மனிதர் உலகம். நகும்—சிரிக்கும். நெடு வயிரத்தோளால்—என் நீண்ட வயிரத் தோள் குலுங்க. நான் நகு—நான் சிரித்த. நாணேன்—நாணுதவனாய். வேல் நகு—வேலாயுதத்தைச் சிரிக்கிற; 'இந்தக் கூர்மை நமக்கு இல்லையே!' என்பது போல் வேலை அவமதிக்கிற. நெடுங்கண்—மகிழ்ச்சியால் நீண்ட கண்களையும். செவ்வாய்—சிவந்த வாயையும். சாம்புகின்றான்—வாடிப் போகிறான்.]

படுக்கையிலா, படுகளத்திலா ?

இப்போது வருகிறான் மாலியவான். ராவணன் படுக்கையில் படுத்தபடியே பாட்டன் வருவதை நோக்குகிறான்.

என்ன விநோதம்! போர்க்களத்திலா இன்னும் இருக்கிறோம்! இல்லையே, அந்தப் படுகளத்தை விட்டு அப்போதே வெளியேறி வந்து இந்தப் பூம் படுக்கையில் அல்லவா கிடக்கிறோம்! ஏன் இந்தப் பிரமை!

அந்தப் போரில் ராமனுடைய வில் வளைந்து வளைந்து என்ன பாடு படுத்தி விட்டது! அந்த வளைந்த வில்லை நினைப்பூட்டுகிறதாம், கிழப் பாட்டனின் உறுதியான உடலின் வளைவு. சீதையை மறக்க முடியாதது போல் இப்போது அந்தப் போர்க்களத்தையும் மறக்க முடியவில்லை!

மாலியவானுடைய காலில் அழகான வீரக்கழல் தென்படுகிறது. ராவணன் பாட்டனல்லவா! ராட்சஸ ஆவேசத்துடன் அவனும் பிரசித்தமாக வீரம் விளைத்த காலம் உண்டு.

இலங்கை வேந்தன் காலையும் பொன்னாலாகிய வீரக்கழல் ஒளி பெறச் செய்கின்றது. ஆனால் அந்தக் காலை ராவணன் இப்போது நீட்டியிருக்கும் விதத்திலிருந்தும், அவன் படுக்கையில் கிடக்கும் அந்த அலங்கோல நிலையிலிருந்தும், 'வீரமும் களத்தே போக்கி'ச் சோர்ந்து கிடப்பது உடனே தெளிவாகி விடுகிறது, பாட்டனின் மங்கலான கிழக் கண்களுக்கும்.

ராவணன் படுக்கைக்குப் பக்கத்தில் மெத்தை யிட்ட ஆசனம் ஒன்று கிடக்கிறது. அதில் வந்து உட்கார்ந்து கொள்கிறான் கூனப்பாட்டன். பேரன் நீட்டி நிமிர்ந்து கிடக்கும் அந்தக் கிடையை நோக்கப் போகிறான்.

அதற்கு முன், வளைந்த வில்லை நினை வூட்டிய வண்ணம் பாட்டன் வந்து பேரனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்வதைச் சற்றுக் கூர்ந்து பார்ப்போம்:


ஆங்(கு) அவன் தன்மூ-
  தாதை யாகிய
  மூப்பின் யாக்கை

வாங்கின வரிவில்
  அன்ன மாலிய-
  வான்என்(று) ஓதும்

பூங்கழல் அரக்கன்
  வந்து, பொலங்கழல்
  இலங்கை வேந்தைத்

தாங்கிய அமளி
  மாட்டுஓர், தவிசுடைப்
  பீடம் சார்ந்தான்.

[அவன் தன் மூதாதை—அந்த ராவணனுடைய பாட்டன். மூப்பின்—மூப்பினால். யாக்கை—உடல், வாங்கின—வளைந்த, வரிவில் அன்ன—கட்டு அமைந்த வில்லைப்போல் வளையப் பெற்ற. ஓதும்—பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிற. பூங்கழல் அரக்கன்—அழகிய வீரக்கழல் அணிந்த ராட்சஸன். பொலங்கழல்—பொன்னாலாகிய வீரக்கழல். அமளி மாட்டு—படுக்கையின் பக்கத்தில். தவிசு உடைப்பீடம்—மெத்தையிட்ட ஆசனம்.]



'இலங்கை வேந்தைத் தாங்கிய அமளி' என்று நோக்கத் தக்கது. இந்தச் சொல்லமைப்பே, 'இலங்கையைத் தலைநகராகக் கொண்டு மூன்று உலகங்களையும் தாங்கும் சக்கரவர்த்தியையா இப்படித் தாங்குகிறது இந்தக் கட்டில்!' என்று பிரமிக்கும்படி ராவணன் சோர்ந்து துயருற்று ஒடுங்கிக் கிடப்பதைப் புலப்



படுத்துகிறது. படுக்கையில் கிடக்கிறானா, படுகளத்தில்தான் கிடக்கிறானா!

கேள்வி படுத்தும் பாடு

அந்தப் படுக்கையை உற்றுப் பார்த்த மாலியவான் 'நடந்தது என்ன?' என்று வினவுகிறான்:

இருந்தவன், இலங்கை
வேந்தன் இயற்கையை
எய்த நோக்கி,
'பொருந்தவந்(து) உற்ற
போரில் தோற்றனை
போலும்' என்னா,

'வருந்தினை மனமும்
தோளும் வாடினை;
நாளும் வாடாப்
பெருந்தவம் உடைய
ஐயா! என் உற்ற
பெற்றி?' என்றான்.

[இருந்தவன்—பீடத்தில் இருந்த மாலியவான். இயற்கையை— (இங்கே) அடைந்திருக்கும் நிலைமையை, எய்த நோக்கி— உற்று நோக்கி. என்னா – என்று. வருந்தினை -- வருந்தி. வாடினை – வாடினாய். நாளும் – ஒரு பொழுதும். என் உற்ற பெற்றி—நிகழ்ந்த காரியம் என்ன.]

இந்தக் கேள்விக்கு ராவணன் பதில் சொல்லு முன்பே இந்த வினாவின் விளைவாக ராவணனுடைய தோற்றத்தில் சில மாறுபாடுகள் தெளிவுபடுகின்றன, புறத் தோற்றத்திலும், அகத் தோற்றத்திலுமாக. இவற்றையும் மாலியவான் உற்று நோக்குகிறான் என்பதில் ஐயமில்லை.

மாலியவான் தன் வினாவுக்கு விடையை மட்டும் அறிந்துகொள்ள விரும்பவில்லை. ராவணனுடைய அகத்தையும் முகத்திலிருந்து ஒரு புத்தகம் போலப் படிக்க முயல்கிறான்.

ராவணனுடைய நெஞ்சிலுள்ள துன்பத்தை மேலும் மூட்டிவிடுகிறது மாலியவானின் கேள்வி, நெஞ்சு பற்றி எரிவதைக் கண்களிலேயே பார்த்துகொள்கிறான் பாட்டன். அதி சமீபத்தில் இருப்பதால் அந்த நெஞ்சுத்தீ பெருமூச்சுக் காற்றாக வெளிப்படுமாறு திறந்த மூக்கையும் கவனிக்கிறான்.

நாக்கு எப்படி உலர்ந்து கிடக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டு விடுகிறான். 'என்ன செல்லாக் கோபம்! என்ன ஆசைமுறிவு!' என்பது பளிச்சென்று படுகிறது மாலியவானின் நெஞ்சிலே.

ராவணன் இன்னும் வாய் திறந்து ஒன்றும் பதில் சொல்லி விடவில்லை. வினாவுக்கும் விடைக்கும் இடையேயுள்ள இந்தப் பரிதாப நிலையை இதோ பாருங்கள்:

கவையுறு நெஞ்சன்,
காந்திக் கனல்கின்ற
கண்ணன், பத்துச்
சிவையின்வாய் என்னச்
செந்தீ உயிர்ப்புறத்
திறந்த மூக்கன்,
நவையறு பாகை
அன்றி அழிநினை
நக்கி னும்

சுவை அறப் புலர்ந்த
நாவான், இனையன
சொல்ல லுற்றான்.

[சுவை உறு — துன்பமுற்ற, கண்ணன்—கண்களையுடையவன். சிவை — துருத்தி. உயிர்ப்புற — பெருமூச்சுக் காற்று வெளிப்பட. மூக்கன் —மூக்கையுடையவன். நவையறு — குற்றமற்ற, பாகு — வெல்லப்பாகு, சுவை அற — சுவை தெரியாதபடி. இனையன — இவ்வாறான சொற்களை.]

சாதாரணமாக வெல்லப்பாகை நினைத்தாலும் நாவில் நீர் ஊறும் என்பர். அமிர்தத்தை நக்கினாலும் ராவணனுடைய நாவிலோ சுவையும் உறைக்கவில்லை; உமிழ் நீரும் ஊறவில்லையாம்.

இப்படி உலர்ந்து கிடக்கும் நாக்கிலிருந்தே, பொங்கிப் போக்குவிடுபெறாது நெஞ்சைக் குமைத்துக் குமுறிக்கொண்டிருக்கும் சீற்றத்தை ஊகித்துக் கொள்ளலாம். இத்தகைய கோபம் உமிழ் நீர்க் கோளங்களை வற்றி வறளச் செய்துவிடும் என்பது பிரசித்தம்.

'அமுதினை நக்கினும் சுவையறப் புலர்ந்த நாவான்' என்று காட்டுவதைவிட ராவணனுடைய இந்த நிலையை வேறு வகையில் இவ்வளவு தெளிவாக வருணித்துக் காட்ட முடியுமா! 'நெஞ்சன்' 'கண்ணன்' 'மூக்கன்' என்று சொல்லிக்கொண்டே வந்து 'நாவான்' என்று முடித்து ராவணனைக் காட்டி, அந்த நாவால் அவன் கூறும் விடையையும் நமது காதில் விழச் செய்யப் போகிறான் கவிஞன்.

* * *

விடையைக் கேட்பதற்கு முன், நாலு பாடல்களால் இயன்ற இந்தக் கம்ப சூத்திரத்தின் சிறப்பியல்பை நாம் உணர்ந்து கொள்வது நலமாகும். உணர்ச்சி—வேகத்தை மனோ தத்துவ ரீதியில் — அதே சமயம் இசை கலந்த தர்க்க ரீதியிலும் — காட்டியிருப்பது இந்தச் சிறு கட்டத்தின் ஒரு பெருஞ் சிறப்பியல்பு.

இந்தக் கட்டத்தின் கதையமைப்பு மிகவும் சுருக்கமாயிருந்தாலும், வியக்கத் தக்கது. படுகள நினைவிலிருந்து சீதை—நினைவு வருகிறது. சீதை சிரிப்பளே என்று நெஞ்சைத் துயரம் எரிக்கத் தீயால் கருண்டு போகும் இலைபோல் ஒடுங்கிக் கிடக்கிறான் படுக்கையிலே ராவணன்.

தானும் துயரமுமாகக் கிடப்பவன் பாட்டன் வருவதைப் பார்க்கிறான். மாலியவான் வந்து பக்கத்துப் பீடத்தில் அமர்ந்து, 'நேர்ந்தது என்ன!' என்று மெள்ளக் கேட்கிறான். ராவணன் திக்குமுக்காடிப் பதில் சொல்லப் போகிறான்.

இக் கதைச் சுருக்கத்திற்குள் விவரங்களைப் புதைத்துக் காட்டுகிறான் கவிஞன்.

ராவணன் தோள் குலுங்கப் பகைவர்களை நோக்கிச் சிரிப்பதையும், சீதையின் நெடுங்கண் ராவணனை நோக்கிச் சிரிப்பதையும், ராவணனுடைய நெடுமேனியும் ஒரு சாணாகக் குறுகிப் போவதையும் ஒரே பாட்டில் பார்த்து விடுகிறோம்.

மாலியவானுடைய கிழ உடம்பு வளைந்த வில்லை நினைவூட்டி ராவணன் நினைவை மீண்டும் படுகளத்திற்கு இழுத்துச் செல்வது போலத் தோன்றுகிறது.

மாலியவானைத்தான் எவ்வளவு சாமர்த்திய சாலியாகக் காட்டுகிறது இந்தக் கட்டம்! 'பயலே! நீ தோற்றுப் போய் விட்டாயா!' என்று உள்ளுக்குள் சொல்லிக்கொண்டே வெளிப்படையாக, 'வாடாத உள்ளமும் உடம்பும் வாடியிருக்கின்றனவே, என்ன செய்தி!' என்று தன் உள்ளுணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு மெள்ளக் கேட்கிறான். ராவணனோ தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ளவே முடியவில்லை.

இவற்றையெல்லாம் சித்திரிக்கும் கவிதைச் சிறப்பு ஓதி ஓதி உணரத்தக்கது. சொல்லவா வேண்டும்!